# சத்திய வேத பாதுகாவலன்

கத்தோலிக்க வார வெளியீடு
(செய்தித்தாளாகப் பதிவுபெற்றது)

**காவலன்**
**சந்தாதாரரின் கவனத்திற்கு**

| | | |
|---|---|---|
| வருட சந்தா | ரூபா | 9-00 |
| 6 மாத ,, | ,, | 4-50 |
| 3 மாத ,, | ,, | 2-25 |

(தபாற் செலவு உட்பட)

95-ம் புத். | 1970-ம் ஆண்டு சித்திரை மாதம் 25-ந் திகதி சனிக்கிழமை — பிரதிசதம் 15 | 15-ம் இல.


## உலகில் கத்தோலிக்கர் எண்ணிக்கை அறுபத்தொரு கோடி

உலகில் தற்போது 61,37,60,000 கத்தோலிக்கர் இருக்கிறார்கள். வத்திக்கான் நாளிதழான L'Osservatore Romano உலக மக்கள் தொகை பற்றிய புள்ளி விபரங்கள் பல வெளியிட்டுள்ளது.

புரொட்டஸ்தாந்தார் தொகை 27,20,18,000. ஆர்தடாக்ஸ் சபையினர் 14,2433.000.

உலகில் கிறிஸ்துவரல்லாதார் 229·2 கோடி. இவர்களுள் 50 9 கோடி முஸ்லிமகள் 44 4 கோடி இந்துக்கள்; 13,960,000 யூதர்கள். பௌத்தர்கள், ஷின்டாயிஸ்டுகள், இயற்கைச் சமயத்தினர் முதலியோர் 132 6 கோடி.

ஐரோப்பாவில் 22 5 கோடி கத்தோலிக்கர் வாழ்கிறார்கள், அதற்கடுத்தபடி இலத்தீன் அமெரிக்காவில் 5 5 கோடி கத்தோலிக்கர்; 4·7 கோடி ஆசியாவில்; 3·2 கோடி ஆபிரிக்காவில்.

ஐரோப்பாவில் 10,27,000 குருக்களும், கன்னியர்களும் பணி புரிகிறார்கள்; ஆசியாவில் 110,000.

— சர்வவியாபி

## கேரளதேச மேற்றிராணிமாரின் உதாரகுணம்

தென் இந்தியாவில் கேரள பிரதேசத்திலே வறிய மக்கள் பல ஆயிரக்கணக்கானோர் வசிக்கக் குடிநிலமின்றித் தவிக்கின்றனர். இவர்களுக்குஉதவ அப்பிரதேசஅரசாங்கம் சென்ற சிலவருடங்களாகச் சட்டங்கள் இயற்றி வருகின்றது. இச்சட்டங்களுக்கு இணங்க நில புலமுள்ளோர் தமது பரந்த நிலங்களில் சிலவற்றைக் கொடுத்துதவ வேண்டியுள்ளார். இச்சட்டங்களை அமுல் நடத்தும்காலம் இன்னும் வராவிடினும் அப்பிரதேச மேற்றிராணிமார்கள் அச்சட்டங்களின் நன்மைத்தனத்தை மக்களுக்கு உணர்த்தி தமக்குள்ள சில நிலங்களைத்தன்னும் வறிய மக்களுக்குக் கொடுத்துதவ முன்வந்திருக்கின்றனர். இவ்வாறு கொடுத்துதவ முன்வந்திருப்பவர்களில் கருதினல் யோசவ் பறக்கட்டில் என்பவர் தலையானவர்.

## கன்னியரின் தந்தை குருவானவர்

இரு கன்னியாஸ்திரிகளின் தந்தையான யோசவ் மார்டீன் இவ்வருடம் பங்குனியில் ரோமாபுரியிலே தமது 67-ம் வயதிலே குருத்துவாபிஷேகம் பெற்றார். இவர் மனைவி 4 வருடங்களுக்குமுன்னே காலஞ்செல்ல, தமது குருத்துவப் படிப்பை ஆரம்பித்தார். வண. மார்டீன்சுவாமியார் ஓர் எஞ்சினீயர், இவர் மனைவி காலஞ்சென்றது, இங்கிலாந்திலுள்ள மான்செஸ்ரர் அர்ச். சூசையப்பர் மருத்துவ மனையிலே. அவ்விடத்திலேயே அவர் மனைவியின் ஆத்தும இளைப்பாற்றிக்காக அண்மையில் திருப்பலி ஒப்புக்கொடுத்தபோது கன்னிகாஸ்திரிகளான இரு புத்திரிகளும் பங்குபற்றினர்.

## 88-ம் வயதில் இளைப்பாற்றி

நியூசிலாந்திலுள்ள அஉக்லாந்தின் அதிமேற்றிராணியாரான லிஸ்ரன் ஆண்டகைக்கு இப்போது 88வயது. இனிமேல் இப்பொறுப்பைக் கொண்டு நடத்த இயலாதென்று தமது பதவியிலிருந்து விலக உத்தரவு தரும்படி பாப்பரசரைக் கேட்டிருந்தார். பாப்பரசரும் இவ்வேண்டுகோளுக்கு இசைவு தெரிவித்திருக்கிறார்.

* * *

## 80-ம் வயதில் மறைவு

கங்கேரியதேச ஆயர் சபையின்தலைவராயிருந்து 3வருடங்களின்முன்னே அப்பதவியிலிருந்துஇளைப்பாறிய கலொஸ்காவின் அதிமேற்றிராணியாரான ஹம்வாஸ் அடிகளார் அண்மையில் தமது 80-ம் வயதில் காலமானார்.

## பரிசுத்த கன்னிமரியாயும் அங்கிளிக்கன் மேற்றிராணியாரும்

லண்டன்நகர் வெஸ்ற்மினிஸ்றர் ஆசனக்கோவிலிலே சமீபத்தில் நடந்தேறிய முத். கன்னிமரியாயின் கிறிஸ்தவ ஐக்கிய சபையின் அயனுந்த கூட்டத்தில் சலிஸ்பறியின் அங்கிளிக்கன்சபை மேற்றிராணியாரான டக்றர் யோசெவ் பிசன் அவர்கள் பேசியபோது, தேவதாயாரையும், திருக்குழந்தை யேசுவையும் காண்பிக்கும் அதிகார சின்னத்தைக் கொண்டவராய் இங்கிலாந்துச் சபையிலுள்ள ஒரேயொரு மேற்றிராணியார் தாமேயெனக்கூறிப் பெருமைபாராட்டினர்.

மத்திய காலங்களில் தேவதாயாரை மகிமைப்படுத்துமுகமாகச் சலிஸ்பறி ஆசனக்கோவிலில் இருந்துவந்த பீடங்களையும், நடைபெற்றுவந்த திருப்பலிகளையும், பக்தி அனுசாரங்களையும்பற்றி அதிகம் மனோற்சாகத்துடன் அவ்வேளை அவர் பேசலாயினர்.

ஒரு காலத்திலே சலிஸ்பறியின் மேற்றிராணியாராய் விளங்கியிருந்த றிச்சேட் பூர் அடிகளால்வனவாசிகளான துறவிகளுக்கு வழிகாட்டுமுகமாக எழுதப்பட்டபெயர்பெற்ற "அன்ஸ் கிறென் றிக்கோல்" என்ற நூலிலிருந்து கன்னிமரியம்மாளுக்கு வழங்கப்பட்ட மகிமை வாய்ந்த நாமங்களின் நீண்ட பெயர் அட்டவணை உட்பட அவளைப்பற்றி இங்கிலாந்திலே புரொட்டஸ்தாந்த சமயமாற்றம் ஏற்படுமுன் எழுதப்பட்ட நூல்களிலிருந்து பல வசனங்களையும் அத்தருணம் அவர் மேற்கோளாகப் படித்துக் காட்டினார்.

## சக்கரவர்த்தியின் அன்பளிப்பு

ரோமைநகரில் இருந்துவருகின்ற எத்தியோப்பிய குருமடத்தின் பொன் யூபிலிவிழா அண்மையில் கொண்டாடப்பட்டபோது, பரிசுத்த ஸ்தானத்தினிடமாக இருந்துவருகின்ற அந்நாட்டின் ஸ்தானீகர் அக்குருமடத்தின் அதிபர் சுவாமிகளுக்கு எத்தியோப்பிய சக்கிரவர்த்தி ஹெயில்செலாசியின் அன்பளிப்பு ஒன்றை அதாவது அமரக்கியபாஷை வேதாகமம் ஒன்றைச் சங்மானிக்கலாயினர். அத்துடன் சக்கிரவர்த்தி அனுப்பிய திருமுகத்திலே, "இந்த மகிழ்ச்சிகரமான பொன் யூபிலி விழாவின் ஞாபகார்த்தமாகப் பழைய புதிய ஏற்பாடுகளை அடக்கியதான பரிசுத்த சுவிசேஷம் ஒன்றைத் தங்களுக்கு அன்பளிப்புச்செய்கின்றோம். இஃது பெயர்பெற்ற நிபுணர்களால் நவமாக மொழி பெயர்க்கப்பட்டது. அதிக சாவதானத்துடன் அச்சேற்றப்பட்டது. அதனால் தங்கள் மாணவர்கள் குருமடத்தில் பெற்றுக்கொள்ளும் கல்வியானது அவர்கள் நாட்டின் சுபீட்சத்திற்கும், நல்வாழ்விற்கும் உழைக்க இஃது ஓர் ஊருணியாய் இருந்துவருமென நம்புகிறோம்" என வரைந்திருந்தார்.

## பேதுருவானவர் மகாலய சினிமாப்படம்

ரோமாபுரி சம்பேதுருவானவர்மகா தேவாலயத்தின் உட்புறத்தை அதிகம் விரிவாகச் சலனப் படம் பிடித்துச் சினிமாப்படம் ஒன்றைத் தயாரிக்குமாறு பரிசுத்த ஸ்தானம் முதன் முதலாக வர்த்தகரீதியிலே சினிமாப்படங்கள் உற்பத்திசெய்கிறவரான திரு. ஸ்ரான்லி ஏபிரகாம்ஸ என்பவருக்கு அனுமதியளிக்கலாயிற்று. இவருக்கு முன் அதைச் சினமாப் படம்பிடிக்க எவருமே முன்வந்து கேட்டதில்லை.

இவர் அப்பேராலயத்தின் ஏறக்குறைய முழுப் பகுதியையும் படம்பிடித்து "இந்தக் கல்லின்மேல்" எனும் நாமத்துடன் 90 நிமிஷம் ஓடக்கூடியதான சினிமாப்படம் ஒன்றைத் தயாரித்திருக்கின்றார். சின்னப்ப பாப்பரசரின் நேர்முகமான அங்கீகாரத்துடன் தங்கள் தொழிலுக்குரிய தகைமையிலே நடிகர்கள் அம்மகாலயத்தை பயன்படுத்த அனுமதிக்கப்பட்டது. இந்தப்படம் உலகின் முக்கியமான பாஷைகளிலெல்லாம் மொழி பெயர்க்கப்பட வேண்டுமென்பது ஒரு நிபந்தனையாகும். ருஷியர்கள்தானும் இதில் ஒரு பிரதியைக் கேட்டிருப்பதாகத் திரு. ஏபிரகாம்ஸ் கூறுகின்றார்.

இரவிலே படம் பிடிக்குமுன் ஆலயஉட்புறத்தை ஒளிபெறச்செய்யுமுகமாக 4,000வீடுகளுக்கு வெளிச்சங்கொடுககக்கூடிய 20,000 கிலோவிற் மின்சாரசக்தி பயன்படுத்தப்பட்டது. மின்சாரவிளக்குகள் இணைப்பதற்காக 70மனிதர்சேர்ந்து மூன்று மைல் நீளமான கேபிள்களைப் போட்டார்கள். தான் உதவிய மின்சாரத்துக்குவத்திக்கான் பணம் கேட்கவில்லை ஆனால், தாம் பயன்படுத்திய மின்சாரத்துக்கு ஏற்பட்ட செலவைத் திரு. ஏபிரகாம்ஸ் கொடுத்துவிட்டார். படத்தில் மிக்கேல் ஆஞ்ஜெலோவாக ஓர் சன் வெலெஸ் என்பவரும், சுவீடன்தேச கிறிஸ்ரியாறு இராணியாக டேம் எடித் ஈவான் எனும் பெண்மணியும், பொன்னி இளவரசர் சாளியாக டேர்க்பொகார்டி என்பவரும் நடிக்க, சேர் ருல்வ் றிச்சாட்சன் அவர்கள் கதைசொல்பவராக இருக்

[தொடர்ச்சி 5-ம் பக்கம்]

"கர்த்தர் நகரத்தைக் காக்காவிட்டால் அதைக் காக்கிறவன் கண்விழிப்பது வீண்

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

# இலங்கைக் கத்தோலிக்க திருச்சபை

ஆங்கில மூலம்: மறைத்திரு. சைமன் கிறகோரி பெரோ, யே. ச.
தமிழாக்கம்: நெடுந்தீவு, ம. மரியதாசன்.

நமது நாட்டில் நானூறு ஆண்டுகளாகக் கத்தோலிக்க திருச்சபை இயங்கிவருகிறது. எண்ணிக்கையைப் பொறுத்த வரையில் கத்தோலிக்கர்கள் மூன்றாமிடத்தை வகிக்கின்றனர். ஆண்டாண்டுகாலமாக எம்முடன் சேர்த்துக் கணக்கிடப்பட்ட பிரிவினைச் சபையினரை நீக்கிவிட்டுப் பார்ப்போமானல் சமூகம், கல்வி ஆகியவற்றோடு சம்பந்தப்பட்ட ஸ்தாபனங்களை சீரானமுறையில் நடத்திவருவதில் நாம் மற்றவர்களோடு சரிநிகராகவே நிற்கிறோம். ஓர் அதிமேற்றிராணியார் உட்பட 5 மேற்றிராணிமார்களையும் 300 குருப்பிரசாதிகளையும் கொண்ட நமது நாடு 5 மேற்றிராசனங்களாக பிரிக்கப்பட்டிருக்கிறது. (மொழிபெயர்ப்பாளர்குறிப்பு: இக்கட்டுரை எழுதப்பட்டபொழுது நமது நாட்டில் 5 மேற்றிராசனங்களே இருந்தன. ஆனல், தற்போது இலங்கை 6 மேற்றிராசனங்களாகப் பிரிக்கப்பட்டிருக்கிறது). தேவாலயங்களையும் சிற்றாலயங்களையும் நாடுமுழுவதிலும் நாம் நிறுவியிருக்கிறோம். பிறநாட்டையும் நமதுநாட்டையும் சேர்ந்த குருப்பிரசாதிகளும் சகோதரர்களும் கன்னியர்களும் மக்கள் நலன்கருதி ஆண் பெண் இருபாலார்க்குரிய கல்லூரிகளையும், கன்னியர் மடங்களையும், பள்ளிக்கூடங்களையும் நடாத்தி வருகின்றனர். கீழைத்தேயத்தில் மிகச் சிறந்த கத்தோலிக்க நகரங்களிலொன்றாகிய நமதுநாட்டின் தலைநகரில் வாழுகின்ற ஒவ்வொரு இனத்தைச்சேர்ந்த கத்தோலிக்கர்களும் தத்தமது தேசிய இனத்திற்குரிய வாழ்க்கைமுறைகளைப் பின்பற்றி வாழுகின்றனர். நாட்டின் பொதுவாழ்வில் முக்கியஇடம வகிக்கும கத்தோலிக்க திருச்சபையானது பலபாகங்களிலும் பரந்துவிரிந்து வேரூன்றியிருக்கிறது. போர்த்துக்கீசர், ஒல்லாந்தர் ஆகிய இரண்டுகிறீஸ்தவ ஆட்சியாளர்களின்கீழ் வாழ்ந்துவந்த இத்திருச்சபையானது ஓர் அரசின் முறையற்ற சலுகைகளைப் பயன்படுத்தியும் மறுஅரசின் அரசியல் நெருக்கடிகளை அனுபவித்தும் உயிர்வாழ்ந்துவந்திருக்கிறது. கோட்டை, கண்டி, யாழ்ப்பாணம் ஆகிய இராச்சியங்களைச் சேர்ந்த மன்னர்களின் ஆளுகைக்குட்பட்டிருந்த இத்திருச்சபையானது அவர்களின் உதவிகளை நன்றியுணர்ச்சியுடன் ஏற்றுக்கொண்டிருந்த அதேநேரத்தில் அவர்களின் துவேசமனப்பான்மையையும் மனோதைரியத்துடன் தாங்கிக்கொண்டும் வந்திருக்கிறது. அரசபரம்பரையினரோ அழிந்தொழிந்து போயினர். ஆனல் திருச்சபையோ இன்றும் உயிர்வாழ்ந்துகொண்டிருக்கிறது. முன்னர் புரட்டஸ்தாந்த மதச்சார்புடையதாகவும் தற்போது நடுநிலைமைக்கொள்கையுடையதுமான பிரிட்டிஸ் ஆட்சியாளரின்கீழ் நூற்றுக்கு மேற்பட்ட ஆண்டுகளாக வாழ்ந்துவந்த திருச்சபையானது அந்த ஆட்சியாளரின் அநியாயமான கட்டளைகளுக்கு ஒருபோதும் அடிபணியாத அதேநேரத்தில் அவாகளது நியாயமான சட்டதிட்டங்களுக்குப் பணிந்துநடக்கவும்தவறவில்லை. ஆண்டவனருளால். சரித்திரத்திடம்பெற்ற யோவான் பெரியபந்தா, கண்டிய இராக்கினி தோனகத்தரினு போன்றவர்களையெல்லாமம தன்னகத்தேகொண்டிருந்த இத்திருச்சபையானது பரிசுத்த பாப்பாண்டவராலும் அரசினராலும் 'நைற்பட்டம்' வழங்கப்பட்ட சேர். தோமஸ் டி சம்பாய்வா அவர்களை ஆளாக்கிவைத்து அழகியவண்ண மொகத்தலா போன்றகவிஞரையும், சைமன் காசிச்செட்டி போன்ற எழுத்தாளரையும், உதுமாங்கந சாடியேல் போன்ற கள்ளனையும், வேதவிசுவாசத்தைத் தழுவச்செய்திருக்கிறது. அதிமேற்றிராணியார் கௌடேற் போன்ற ஒருபரிபாலகருக்கும், அருட்திரு. யக்கோமேகொன்சால்வேஸ் போன்ற ஒரு சிங்களப்புலவருக்கும், ஆசாரத்திற்குரிய யோசேவ்வாஸ் போன்ற ஓர் அப்போஸ்தலருக்கும் உரிமை கொண்டாடுவதும இந்தத் திருச்சபைதான். வேதவிசுவாசத்தைக் கைவிடுவதைக்காட்டிலும் கீழ்த்தரமான நிலைக்குத் தள்ளப்பட்டு வறுமையைத் தழுவச்செய்து ஏளனம் செய்யப்படுவதையே பெரிதும் விரும்பி ஆலயங்களோ அன்றேல் குருக்களோ இல்லாமல் தலைமுறை தலைமுறையாகத் தவித்துக்கொண்டிருந்தபோர்த்துக்கீச பரம்பரையினருக்கு வேதவிளக்கேற்றிவைத்த வஹக்கோட்டை போன்ற மலைப்பிரதேச நகரத்தையும், ஒருகாலத்தில் வேதத்திற்காக உயிர்நீத்தஉத்தமர்கள் 600பேரைச் சுட்டிக்காட்டி தனது அந்தஸ்தை நிலைநாட்டுவதும் இந்தத் திருச்சபைதான். (மொழிபெயர்ப்பாளர் குறிப்பு: போர்த்துக்கீச பரம்பரையினருக்கு பிற்காலத்தில் நேர்ந்த கதியென்ன என்பது பற்றி இக்கட்டுரையில் கடைசிப் பந்தியொன்றில் தெளிவாகக் குறிப்பிடப்பட்டிருக்கிறது. போர்த்துக்கீச பரம்பரையினர் வஹக்கோட்டையைச்சுற்றி மட்டும் வாழவில்லை. வடஇலங்கையிலும இவர்கள் வாழுகின்றனர். குறிப்பாக நெடுந்தீவு, புங்குடுதீவு, இரணைதீவு போன்ற தீவுகளிலும் வாழுகின்றனர். இற்றைக்குச் சுமார் 300 ஆண்டுகளுக்கு முன்னர் கலப்புத் திருமணத்தினல் இவர்களின் தாய்மொழி மறையத்தொடங்கவே தமிழ்மொழி அந்தஇடத்தைப் பிடித்துக்கொண்டது. தற்போது இவர்கள்பருவநிலைக்கேற்ப கமத்தொழிலும் கடற்றொழிலும் செய்து வாழ்க்கை நடாத்துகின்றனர்.) நமது முன்னோர்களின் பாதுகாவலரான பரிசுத்த கன்னிமரியம்மாள், புனித அன்னம்மாள், புனித அந்தோனியார் ஆகியோரின் நினைவாகவும் இருள்படர்ந்த வேதகலாபனைக் காலத்தின் ஞாபகார்த்தமாகவும் திகழ்ந்துவருகின்ற மருதமடு, தலைவில்லு, கொச்சிக்கடை போன்ற புண்ணிய சேத்திரங்களுக்கு உரிமைகொண்டாடுவதும இந்தத் திருச்சபைதான். சுருக்கமாகச் சொன்னல், அக்காலத்தில் மனோதைரியத்துடன் பலவகைப்பட்ட பக்தர்களையெல்லாம்தன்பாலீர்த்து அவர்களுக்கு அரும்பெருமதொண்டாற்றி இன்பதுன்பங்களையெல்லாம் அனுபவித்துவந்த இத்திருச்சபையானது அதனது அன்றைய வாழ்வின் அடிச்சுவட்டை இன்று பின்பற்றி நடப்பது மிக அவசியமாகும். இத்திருச்சபையின் இன்பதுன்பங்களையும் நயநட்டங்களையும் பற்றிய சரித்திரம் எழுதப்படல் வேண்டும். இச்சரித்திரத்தில் திருச்சபை அடைந்த கஷ்டங்களும் வெற்றிகளும் இடம்பெறல வேண்டும். அதுமட்டுமன்றி, இத்திருச்சபையானது தனது நலவுரிமைகளுக்காகவும், முன்னேற்றத்திற்காகவும் ஆட்சியாளர்களின் ஆதரவையும் எமக்கு வருவாய் கொடுத்துக்கொண்டிருக்கும் மூலவளங்களையும் எதிர்பார்க்காமல், திருச்சபையை உண்டாக்கிய இறைவனின் வாக்குறுதியிலேயும் எமது களங்கமற்ற விசுவாசத்திலேயும் தங்கியிருக்கின்றதென்ற உண்மை நமது உள்ளத்தில் பதியக்கூடிய விதத்தில் இச்சரித்திரம் எழுதப்படல் வேண்டும்.

நீண்டதும் நிகழ்ச்சிகள் நிறைந்ததுமான திருச்சபைச் சரித்திரத்தை ஒரு விரிவுரையை எழுதுவதன்மூலம் திருப்திகரமாக எழுதிமுடித்துவிட்டேனென நான் கூறமாட்டேன். இலங்கைத் திருச்சபைச் சரித்திரத்தில் தெய்வ அனுக்கிரகம் எவ்வாறு துணைபுரிந்து வந்ததென்பதையும் காலத்திற்குக்காலம் இதனகத்தே காணப்பட்ட இலட்சணங்களையும், இது தோன்றிவளர்ந்த விதத்தையும் தேடி ஆராய்ந்து அவற்றினை வாசகர்களாகிய உங்களுக்குத் தெரியப்படுத்துவதே எனது எண்ணமாகும்.

உலகத்திலே கத்தோலிக்க திருச்சபைஇருக்கிறது. ஆனல் அது உலகத்திற்குரியதல்ல. நல்லவர்களும் தீயவர்களும் திருச்சபையிலிருக்கின்றனர். பலவழிகளிலும் திருச்சபையானது மனிதனையே நம்பியிருக்கிறது. எனினும் தனது கடமை சம்பந்தப்பட்ட விடயத்தில் மனித சுதந்திரத்தை அடிப்படையாகக்கொண்டே செயலாற்றிவருகிறது. அறிந்து நம்பிக்கை வைப்பது அதைக் கொள்ளும் வழிகளிலொன்றாகும். கேட்பதற்குநமக்குச் செவிகளிருந்தபோதிலும் சொல்பவரில்லாமல் நாம்கேட்கமுடியாது. வாஸ்கொடகாமா நல்நம்பிக்கைமுனையைச்சுற்றி வந்த எட்டு ஆண்டுகளுக்குப் பின்னர் எதிர்பாராதவிதமாக இலங்கைக்கு வந்துசேர்ந்தவர்களே இங்கு சுவிசேஷத்தைப் போதித்த முதற்கிறீஸ்தவர்களாவார்கள்.

[வளரும்]

# இதய கீதமாகிய நன்றிக் கீதம்

ஒருவரிடமிருந்து ஓர் உபகாரத்தைப் பெறும்பொழுது அதற்காக நாம் அவருக்கு நன்றி கூறுகின்றோம். ஆம், நன்றி கூறுதல் என்பது நம் இதயத்தினின்று எழும் ஒரு நன்றித்துதியாகும். இந்தத் துதி எமது இருதய ஆழத்திலிருந்து எழுவதாலே அன்பு கனிந்த, உள்ளங்குளிர்ந்த ஒரு நன்றிக் கீதமாக மலர்கின்றது. ஏதோ ஒருவகையிலே எமக்கு உபகாரம் செய்தவர்கள் மட்டில் நாம் மனமுவந்து, முகமலர்ந்து நன்றி பாராட்டுவது ஒரு பெருங்குணமாகும். பெருந்தன்மையான ஒருசெயலாகும்.

முந்தமுந்த எமது நன்றித்துதிக்கு அதிகம் பாத்திரமானவர் யார்? உற்றார், பெற்றார், உடன்பிறந்தாரா? குரவர், ஆசிரியர், பெரியோர் முதலானவரா? இல்லை. பின்னர் வேறு யாவர்? நம்மைச் சிருட்டித்துப் பரிபாலித்துவருகின்ற எல்லாம்வல்ல இறைவனேயல்லாது வேறெவருமல்ல.

— ஞானம் —

அவரிடமிருந்து நாம் பெற்றுக்கொள்ளும் அநேகாநேக பேருபகாரங்களுக்காக அவருக்கு நமது இதயம் கனிந்து நன்றித்துதி கூறுவது நம்மேல்சுமந்த பாரதூரமான ஒரு கடமையாகும். இந்த மாபெரும் கடமையை உள்ளத்தில் கொண்டு அவருக்கு நன்றித்துதிகூற நினைக்கின்றோமா? நமது தினசரி வாழ்க்கையிலே அவருக்கு நன்றித்துதி கூறுவதற்குப் பல சந்தர்ப்பங்கள் உள்ளன என்பதைச் சிந்திக்கிறோமா? இல்லையானல் கவனிப்போம.

அதிகாலையில் ஆலய மணி அடித்து நம்மைக் கோவிலுக்கு அழைக்கின்றதே. ஏன்? அங்கு வந்து திருப்பலி பூசையில் பங்குபற்றும்படியாகவே. நாமும் காலைக் கடன்களை முடித்து இறைவனைக் கையெடுத்து வணங்கிக்கொண்டு அங்கு செல்லுகின்றோம். ஆயத்த மணி அடிக்கின்றது. கிறிஸ்துநாதரிடமாக நின்று திருப்பலி ஒப்புக்கொடுக்குமாறு குருப்பிரசாதி பலிபீட ஸ்தானத்துக்கு வருகின்றார். ஆசாரத்துடன் பீடத்தை முத்தமிடுகின்றார். திருப்பலிப் புத்தகத்தைத் திறக்கின்றார். முக்கியமான நான்கு முகாந்திரங்களுக்காகத் திருப்பலி ஒப்புக்கொடுக்கப்படுகிறது; அவற்றிலே இறைவனுக்கு நன்றி செலுத்துவதும் ஒன்று என்பதை உணர்த்திச் செபங்களிலும், திருவாசகங்களிலும் அதை எடுத்துக்காட்டி நடைமுறையிலே அவர் நம்மை வழிநடத்துகின்றார்.

ஆரம்பகட்டத்தின் முதல் வாசகத்திலே, "இது ஆண்டவரின் திருவாக்கு" என்று அவர் சொல்ல, "இறைவனுக்கு நன்றி" என்று நாம் பதிலளிக்கிறோம். அதன்மேல் திருப்பலியின் நடுக்கட்டத்தில்,

"ஆண்டவரே, பரிசுத்த பிதாவே, எல்லாம்வல்ல நித்திய சர்வேசுரா, எங்கள் ஆண்டவராகிய கிறிஸ்துவின் வழியாக எந்நாளும் எவ்விடத்திலும் நாங்கள் உமக்கு நன்றி செலுத்துவது மெய்யாகவே தகுதியும, நீதியுமாகும். எங்கள் கடமையும், மீட்புக்குரிய செயலுமாகும்" என்றும,

"இரக்கம் மிகுந்த தந்தையே, இத்தகைய நன்றி உணர்வுடன் நாங்கள் இப புனித காணிக்கைகளை உமக்குப் பலியாக ஒப்புக்கொடுக்கின்றோம்" என்றும்,

"வாழ்வின் அப்பத்தையும், மீட்பின் கிண்ணத்தையும் நன்றியறிதலுடன் உமக்கு ஒப்புக்கொடுக்கின்றோம்" என்றும்,

"இறைவா...... இப் புனிதமான உயிருள்ளபலியை நன்றியறிதலுடன் உமக்கு ஒப்புக்கொடுக்கின்றோம்" என்றும்,

"கிறிஸ்து தம் மரணத்தினலும், உயிர்ப்பினலும் நம்மை மீட்டார். நித்திய வாழ்வைப் பெற்றுத்தந்தார். எனவே, அவரைப் புகழ்ந்து நன்றிகூறுவோம்" என்றும்,

"நம் தேவனகிய ஆண்டவருக்கு நன்றி கூறுவோம் ... அது தகுதியும், நீதியுமானது" என்றும,

இவ்வாறாக, இறைவனுக்கு நன்றித்துதிகள் பல கூறிப் பூசைப்பலியின் ஈறுந்தகட்டத்தின் பிரியாவிடையிலே,

"சென்றுவாருங்கள் பூசை முடிந்தது" என்று குரவர் விடைகூற, அனைவரும் "சர்வேசுரனுக்கு நன்றி" என்று பதிலளித்து, ஆசிபெற்று வீடு திரும்புகிறோம்.

இனனும் நமது தினசரி வாழ்க்கையிலே இறைவனுக்கு நன்றி கூறும் சந்தர்ப்பங்கள் பல இல்லையா? இல்லையானல் கவனிப்போம்:

காலைச் செபத்திலே "தேவரீர் அடியேனுக்குச் செய்துவருகிற சகல உபகாரங்களுக்காகவும், விசேஷமாய் என்னை இந்நேரமளவும் பிழைத்திருக்கப்பண்ணியதற்காகவும் உமக்கு இடைவிடாத (நன்றியறிந்த) ஸ்தோத்திரம் பண்ணுகிறோம்" என்றும்,

மாலைச்செபத்தில், "சர்வேசுரா சுவாமி, மனுஷர் நித்திரையால்இளைப்பாற இராத்திரி காலத்தைக் கட்டளையிட்டீரே. உமக்கே ஸ்தோத்திரம் உண்டாகக்கடவது. தேவரீர் இன்று எனக்குச் செய்த சகல உபகாரங்களுக்காகவும்உமக்கு ஸ்தோத்திரம்பண்ணி ......" என்றும்,

உணவு அருந்தியபின், "தேவரீர் எனக்குத் தந்தருளிய இந்த ஆகாரங்களுக்காகவும், தேவரீர் எனக்குச் செய்துவருகிற சகல உபகாரங்களுக்காகவும் தேவரீருக்கு நன்றியறிந்த ஸ்தோத்திரம் பண்ணுகிறேன்" என்றும்,

(தொடர்ச்சி 5-ம் பக்கம்)

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

# சேனை வருகிறது!.....

(F. C. வேதநாயகம்)

மோசேஸ், கிறிஸ்ரி இருவரும் இல்லந் தரிசிப்பதையே தங்கள் வழமையான ஊழியமாகப் பெற்றுக்கொள்வார்கள். ஆம், "மரியாயின் சேனை"— அவர்கள் சேனை வீரர்கள். இவர்கள் இருவரும் வயதில் குறைந்தவர்கள்தான். ஆனால் மரியாயின் மாட்சிமை பொருந்திய மாசேனையின் மதிப்புக்குரிய ஊழியர்கள். மோசேஸ் கிறிஸ்ரி இவர்கள் வருவதைக் கண்டாலே காளையர்கள் கைதட்டிப் பரிகாசம் பண்ணுவார்கள். கன்னியர்கள், "பரகதி போகும் பரிசுத்தவான்கள்" என்று பல்லைக் காட்டுவார்கள். வயோதிபர்கள் வம்பளக்கத் தொடங்கிவிடுவார்கள். என்னதான் நடக்கும் நடக்கட்டுமே என்றுகூறிவிட்டு தங்கள் ஊழியமே கண்ணாகச் செல்வார்கள். இது மரியாள் தனது சேனை வீரருக்குக்கொடுத்துள்ளஜொலிக்கும் கூரிய வாள் போன்ற துணிவு, "சேனை வருகிறது" என்று இவ்விருவரையுங் கண்டவுடன் கண்டநிண்டவர்கள் எல்லோருங் கூறுவார்கள்.

இவர்கள் ஊழியத்தில் 'மருதடி மாட்டீன்' வீடே கண்ணயிருந்தது. இவன் இருபது வருடங்களுக்குமுன் ஓர் உத்தம கத்தோலிக்கன். உள்ளத்தாலும், உடலாலும் உன்னத தேவனில் உலகை மறந்து உவகை கொண்டவன். இன்று அவன் நிலைவேறு. வேதமறியாதவர்களை வேண்டி நிற்கிறான்; சாக்கடைநீரை மதுக்கடையில் மதுரமென மண்டுகிறான்; பத்தினி பெர்னதேத்தையும், புத்திரிகள் பதின்மரையும்பாதவிக்கவிட்டுப் பழிக்கஞ்சாத பாவையர்களோடு பாவங்கட்டுகிறான். பக்திச்சபையின் பார்வையில் மாட்டீன் சிக்கிவிட்டான். மோசேஸ், கிறிஸ்ரி இவர்கள் தவறாது வாரந்தோறும் மருதடி மாட்டீன் வீட்டைத் தரிசிக்கத் தொடங்கினார்கள். கோவில்முகங் காணாதகுழந்தைகள்—கடன் திருநாளிலுங் கடவுளை நினையாத கன்னியர்கள்— தவிர, பேதை பெர்னதேத் இவர்கள் தான் மாட்டீன்வீட்டுச் செல்வங்கள். இதைவிட வேறு தேடுவது வேதனையாகும். மாட்டீன்வீட்டில் மாறுசமயவாதிகளும் பக்கத்தறையில் வசிக்கிறார்கள். இந்துமதக் குடும்பமொன்றும், பௌத்தமதகுடும்பமொன்றும் மாட்டீனின் அயலவர்கள் — அதுவும் அடுத்த அறையில் வசிப்பவர்கள். சேனைஊழியர்கள் சேவைசெய்யப் போகும் போதெல்லாம் பொல்லாத அவ்வடுத்தறைவாசிகள் பொழிந்துகொட்டுவார்கள் பொய் வதந்திகளை. பொருட்படுத்த மாட்டார்கள் மரியாயின் மைந்தர்கள். மாட்டீன் வீட்டை மறந்து மாதங்கள் பலகடந்துவிட்டன. பிள்ளைகள் பத்தும் பெற்றெடுத்த பெர்னதேத்துக்குப் பாதிவேளை பாதி வயிறும், சிலவேளை அதுவுமின்றி உண்ண மட்டுமல்ல உடுத்தவுங்கூடவழியின்றி உலகில் ஓர் உதவியின்றி உபத்திரவப்படுகிறார்கள்.

மோசேஸ், கிறிஸ்ரி தங்கள் ஊழியத்தில் எவ்வளவோ தியாக உணர்ச்சியோடும் பொறுமையோடும், சகிப்புத்தன்மையோடும் மரியாளின் நாமத்தால், நல்லகவனஞ்செலுத்தி வந்தார்கள். மாட்டீன்வீட்டில் மட்டுமல்ல, மறுசமயவாதிகள் மட்டிலுங் கண்ணுங் கருத்துமாயிருந்தார்கள். ஒவ்வொருவாரமும் இவர்கள் மாட்டீனின்குடும்பத்திற்குச்செய்துவருஞ் சரீரநன்மைகளைக் கண்டு அடுத்தறைவாசிகள் — பிறசமயவாதிகள் ஆச்சரியப்பட்டார்கள். மாட்டீனின் பிள்ளைகளுக்குப் பாடஞ்சொல்லிக் கொடுத்தும், நல்லபழக்கஞ் கொடுத்தும் படிப்படியாய் அப்பரதேசிகளின் இல்லத்தில் சின்னஞ்சிறு தீபமாய்த் துலங்கக்கூடியதான ஒரு பரமபிதாவின் படமொன்றையும்தொங்கவிட்டார்கள் ஊழியர்கள். மாசற்றகுழந்தைகள் மோசேஸ், கிறிஸ்ரியின் அன்பிலும், அடக்கொடுக்கத்திலுங் கவரப்பட்டுக் கசியத் தொடங்கினார்கள். தருமசபைகளை ஏவித்தவிக்கும் மாட்டீன் குடும்பத்துக்கு மாதாமாதஞ் சொற்பஉதவி கிடைக்கச்செய்தார்கள் மரியாயின் ஊழியர்கள். ஆறரிசியிட்டு அதிலூறிய அவிள்நீர்குடித்த அக்குடும்பத்தின் குடிசையிலிருந்த குடிவையில் மெல்லமெல்லச் சிறு அமுதும் அன்னமாய்அங்கலாய்த்த அக்குடும்பத்திற்கு ஆறுதல் கொடுக்கத் தொடங்கியது. அடுத்தறையில் வாழ்ந்த இந்து மதக்குடியில் குழந்தைவேல் பாரிசவாதநோயால் வருந்திப் பாதிச்சிகிச்சை பாதம்பதியப் பாரில் பலமுறை நடக்கவேணும். இவர் நடந்து நலம் பெற நல்லதொரு துணையில்லை. இதனால் பாதிக்காலம் படுக்கையிலே பறிபோய்விட்டது. இச்செய்தியை மாட்டீனின்மனைவி பெர்னதேத்மோசேஸ், கிறிஸ்ரி என்பவர்களுக்குக் கூறினாள். புதியதொரு புண்ணியப் புதையலைக் கண்டார்கள் ஊழியர்கள். குழந்தைவேல் எதிர்பாராத ஏவல்...... "சி... என்னவெட்கம்! ஏளனஞ்செய்யப் பட்டவர்கள் என்னால் பலமுறை... அவர்கள் எனக்குதவிசெய்ய எவ்வளவோ ஆசைப்படுகிறார்கள்" என்று குழந்தைவேல் நாணிக் குனிந்தான். மோசேஸ் கிறிஸ்ரி வாரமொருமுறைசெய்யுஞ் சேவையைத் தினமும் செய்யத்துணிந்துவிட்டார்கள், ஒவ்வொருநாளும் மாட்டீன் வீட்டுச்சேவையோடு, குழந்தைவேலையும் நடத்திச்சென்று பாதம்பணிய பாதயாத்திரை செய்வார்கள். குறுகிய நாட்களில் குழந்தைவேல் குணமடைந்து வருகிறான். இந்துமதக் குடியில் இன்ப மலர்பூக்கிறது... இனியதொரு வாசனை வீசுகிறது...குழந்தைவேல் உள்ளத்தில் குழந்தையுள்ளம் படைத்த மரியாளின் தாசர்கள் சின்னமாகிவிட்டார்கள்.... குழந்தைவேலின் நிலை கண்டு அங்கு வாழ்ந்துவந்த பௌத்த குடும்பத்தினருக்கு அதிர்ச்சியும் ஆச்சரியமும் உண்டாயிற்று. மோசேஸ், கிறிஸ்ரிசெய்தசேவை பௌத்த ஞானம் படைத்தவர்களையும் பரவசப்படுத்தியது.

அன்று அன்னை மரியாள் ஆரோபணமான தினம். பெர்னதேத் நினைத்துக்கூட முடியாத சம்பவம்... ஆம்... இரண்டு வருடங்களுக்குமுன் அவமானத்தின் சின்னமாய் அலங்கோலத்தோடு அன்று அனைவரையும் விட்டுச்சென்ற மாட்டீன் இன்று சந்திரவதன மொத்த சௌந்தரிய வடிவமாய், இனிய முகத்திலே இன்பகீதம்பாடப் புன்முறுவலோடு புகுந்தான்மாட்டீன்...புண்பட்டிருந்த பெர்னதேத்தின் பண்புள்ளத்திலும்...அது உருக்குலைந்து உருவாக்கிய இல்லத்திலும். மக்கள் மனமகிழ்ந்தனர், அயலவர் அறுகண்டு வியப்புற்றனர்; குழந்தைவேல் குடும்பத்தினர் கூடிக் குதூகலித்தனர்; பௌத்தமத அயலவர் பெருமிதங் கொண்டனர். அன்று முழுவதும் மாட்டீன் வீடு பரமானந்தசாகரத்தில் மூழ்கியது. வழமைபோல மோசேஸ், கிறிஸ்ரி இருவரும் தமது ஊழியத்துக்காக அன்று சாயந்தரம் மருதடி மாட்டீன் வீட்டுக்கு வருகிறார்கள். அன்று மாதாவின் மாட்சிமை பொருந்திய மகோன்னத தினமல்லவா?...பிள்ளைகளுக்குச் சில சிற்றுண்டி வகைகளும், பெரியோர்களுக்கு நல்லசுவையூட்டும் நலமிக்க கதைப்புத்தகங்களும்கொண்டு வருகிறார்கள். வீட்டினுள் நுழைந்ததும்மாட்டீன், மோசேஸ் கிறிஸ்ரி இருவரையும் கண்டான். "என்ன! .....என் கண்கள் என்னை ஏமாற்றுகிறதா?...... என்னை வாழவைத்த தெய்வங்களே! எப்படி என்னிருப்பிடத்தை அளித்தீர்கள்?...... ஆ! உங்களைக்காண நான் படாதபாடுகள் பட்டேன். இன்று உங்களைக்காண நான் செய்த தவப்பயன் எதுவோ?"... என்றிவ்வாறு மருதடியான் ஊழியர்களைக் கட்டியணைத்து ஆனந்தக் கண்ணீர்விடுகிறான். நடந்தவற்றைக் கவனித்துக் கொண்டிருந்த பெர்னதேத், பிள்ளைகள், குழந்தைவேலு குடும்பத்தினரும், பௌத்தசமய வாதிகள் அனைவரும் அங்குநடந்ததென்னவென்றறியாது ஆச்சரியத்தில் மூழ்கிவிட்டார்கள். மோசேஸ், கிறிஸ்ரி ஓரளவு ஊகித்துவிட்டார்கள்.

"அன்று ஒருநாள் தெருக்கோடியில் சிலகயவர்களால் கொடூரமாகத் தீண்டப்பட்டு மரணப்படுக்கையில் உயிருக்காகப் போராடிக் கொண்டிருந்தவனை நாமிருவருங் காப்பாற்றி அவனுக் குயிர்ப்பிச்சையளிக்கச் செய்தோம் பரமனே"... "அந்த மனிதனை வைத்தியரிடங் கொண்டுபோய் நல்ல வைத்தியமுஞ் செய்வித்தோம் ஜெகமாதா கருணையால்."... "உணவின்றி, உற்றார் உறவினரின்றி, உலகில் உறுதுணையில்லாதிருந்தவனை உழைப்பாளியாக்கி உரம்பெறச் செய்தோம் உத்தம யேசு கருணையால்"... "அந்த ஜென்மமே இன்று மருதடி மாட்டீன்... கிறிஸ்ரி! வா போகலாம் எங்கள் கடமை முடிந்துவிட்டது" ...என்று மோசேஸ்கூறி இருவரும் திரும்பி வருகையில் பெர்னதேத் பேதைதான், ஆனால் பேடியல்ல; அவள் ஓடிவந்து அவர்கள் கால்களில் விழுந்து தமது நன்றியைச் செலுத்தினாள். இதை கண்டு கேட்டுமனுபவித்த மாட்டீன் திகைத்துவிட்டான். "என்னையும் என் மனைவி மக்களையும் இவ்வளவு அன்போடுஆதரித்து வாழ்வளித்த அன்புச் செல்வங்கள், இவர்கள் யார்?" என்று பலவாறு சிந்தித்தான். குழந்தைவேலு குடும்பமும், பௌத்த குடும்பமும், கிறீஸ்தவர்கள் இவ்வளவு தியாக உணர்ச்சி உள்ளவர்களா? சேவையுணர்ச்சியுள்ளவர்களா? என்று மனப்போராட்டஞ் செய்தனர்.

மறுநாட்காலை பங்குக்குருவரோடும் தமது ஞானத்தலைவரோடும் மோசேஸ், கிறிஸ்ரி இருவரும் தங்கள் ஊழியத்தின்போது கண்ட அனுபவத்தைப்பேசிக் கொண்டிருக்கையில், ஏதோ சனக்கூட்டம் கட்டளைக் குருவரைநோக்கி விரைந்து வருவதைக் கண்டார்கள். வேறுயாருமல்ல; மருதடி மாட்டீன் தலைமையில் "**ஒரு சேனை வருகிறது**" மாட்டீனும், மனைவிமக்களும் மட்டுமல்ல, குழந்தைவேலு குடும்பமும் மட்டுமல்ல, அந்தப் பௌத்த குடும்பமும் கூடத்தான். குருவானவரும், மோசேசும், கிறிஸ்ரியும் சேனைபோல் திரண்டுவந்த மாட்டீன் படையினரைக்கண்டு வியந்தனர்.

"சுவாமி! சுவாமி! இதோ ஒரு சேனை வருகிறது; எங்களுக்கு ஞானதீட்சை தாருங்கள். எங்களுக்கு ஞானஸ்நானம் தாருங்கள் சுவாமி" என்று இவ்வாறு மாட்டீன் கூறியவாறே குருவானவர் முன்னிலையில் தான்கொண்டுவந்த மக்களை ஒப்படைத்தான்.

கட்டளைக் குருவும் ஞானத்தலைவரும் மோசேஸ் கிறிஸ்ரி இருவரையும் ஒரு கடைக்கண் பார்வை பார்த்தனர். மோசேசும் கிறிஸ்ரியும் ஒருவரை ஒருவர் கடைக்கண் பார்வையால் புரிந்துகொண்டனர்.

ஊழியத்துக்கு ஊதியமுண்டு!
மரியாயின் ஊழியம் மகத்துவமானது!
சேனையின் சேவை அதுவே தேவை!
"மரியாயின் கருணை வழிந்தோடும் தைலம்போன்றது."
(மகா சங்கீதம் 1: 2.)

# அறிவீரா? தெரிவீரே!

### ❋ திருச்சபை ஆண்டு ஆரம்பமாவது எப்போது?

திருமறை வழிபாட்டு முறைப்படியான திருச்சபை ஆண்டு ஆகமனகால முதல் ஆரம்பமாகிறது. அதாவது நவம்பர் 26-க்குப்பின் வரும் முதல் ஞாயிறு ஆகமனகால முதல்நாள். 'ஆகமனம்' என்றால் திருவருகை என்று பொருள்; கிறீஸ்துவின் வருகைக்காக எதிர்பார்த்திருக்கும் தபமுயற்சித் தொடக்கத்திலிருந்து திருச்சபை ஆரம்பிக்கிறது.

### ❋ 'ஆதாம்' என்றால் அர்த்தம் என்ன?

ஆதாம் என்றால் எபிரேய மொழியில் 'மனிதன்' என்று அர்த்தம். ஆனால் பழைய ஏற்பாட்டு, ஆதியாகமப் பகுதியில் (1—3) கடவுளால் படைக்கப்பட்ட 'மனித இனம்' முழுதையுமே குறிக்கும் வகையில் இச்சொல் ஆளப்பட்டிருக்கிறது. அதன் பின்வரும் அதிகாரங்களில் முதல் மனிதனைக் குறிக்கும் இடுகுறிப் பெயராக 'ஆதாம்' உபயோகிக்கப் பட்டுள்ளது.

### ❋ திருச்சபை சட்டப் படியான வயது வரம்பு

வாக்குரிமை பெற, திருமணம் செய்ய என்றெல்லாம் அரசியல் முறையில் வயது வரம்புகளை நிர்ணயித்திருப்பதுபோல, திருச்சபையும் நிர்ணயித்திருக்கிறது. அவரவர்க்குரிய கடமைகளும், நெறிகளும் வயதுக்கேற்ப பொதுவாக வரையறுக்கப் பட்டுள்ளன.

புத்திவிபரம்அறியும் வயது என்பது சாதாரணமாக ஏழு வயது. இதற்குச் சற்று முந்தியும் பிந்தியும் இதனை நடைமுறையில் கொள்ளலாம். இந்த வயதில் சாவான பாவத்திற்கு உள்ளாகக்கூடிய விபரங்களை உணரும் 'வயது' ஆரம்பித்துவிடுவதாகக் கருதப்படுகிறது. எனவே பாவசங்கீர்த்தனம், அவஸ்தை பூசுதல் முதலிய அருட்கொடைகளைப் பெறும் தகுதி அவனுக்கு ஏற்படுகிறது. புதுநன்மையும், உறுதிப்பூசுதலும் இந்த வயதில் வழங்கப்படுகின்றன. ஞானோபதேசம் பெறவும், கிறீஸ்துவ கோட்பாடுகளை அறியவும், தேவதிரவிய அனுமானங்களின் அடிப்படையை அறியவும் இந்தவயதில் கற்பிக்கப்படுவதால் ஒறுத்தல், ஞாயிறு பூசை அனுசரிப்பு முதலிய கடமைகளைச் செய்யும் கட்டாயமும் ஏற்பட்டுவிடுகிறது.

**திருமணம்:** 14 வயதுக்குட்பட்ட பையனோ, 12 வயதுக்குட்பட்ட பெண்ணோ திருமணம்செய்ய முடியாது எனத் திருச்சபை கூறுகிறது.

**ஒருசந்தி:** 21 வயதானால் ஒருசந்தி முதலிய ஒறுத்தல்களை அனுசரிக்கும் கடமை உண்டு. 60-ம் வயதில் இது கட்டாயம் தளர்த்தப்படும்.

**ஞானஸ்நானம்:** ஞானப் பெற்றோராக இருப்போருக்குக் குறைந்தபட்சம் 14 வயதாவது ஆகியிருக்கவேண்டும்.

**குருப்பட்டம்:** சாதாரணமாக உபதியாக்கோனுக்கு 21 வயது; தியாக்கோனுக்கு 22 வயது; குருவுக்கு 24 வயது ஆகியிருக்கவேண்டும். ஆயாராவதற்கு 30 வயது; விக்கார் ஜெனறல் முதலிய முக்கியமானவர்கட்கும் இந்த வயது நிர்ணயிக்கப்பட்டுள்ளது. துறவற நிலைக்கு அபேட்சிப்போருக்குக் குறைந்தபட்ச வயது 16. ஆயத்தமடத்தில் ஓராண்டுப் பயிற்சிபெறவேண்டியது அவசியம். நிரந்தர வார்த்தைப்பாடுதர உரியவயது 21. துறவற சபைகளின் பிரதான தலைவராவோர், 10 ஆண்டுகளாவது அச்சபையில் இருந்திருக்க வேண்டும். 40 வயதாவது ஆகியிருக்க வேண்டும்.

—நன்றி கத்தோலிக்கு சேவை

● சர்வதேச சற்பிரசாத மகாநாடுகளின் இயக்கத்திற்குப் பொறுப்பாக இருந்துவரும் நிரந்தர சபையுடன் ஆலோசனை செய்தபின் 1973-ம் ஆண்டின் சர்வதேச சற்பிரசாத மகாநாடு நடைபெறவேண்டிய இடமாக ஆஸ்திரேலிய தேச மெல்போண் நகரைப் பாப்பரசர் தெரிவு செய்திருக்கின்றார்.

Digitized by Noolaham Foundation
noolaham.org | aavanaham.org

# பிள்ளை மனம்

(தெல்மா கோமெஸ்— திருமலை)

மனோகரமான காலைநேரம், கதிரவன் தனதுசெழுமையான கதிர்களால் உலகை உழுது கொண்டிருந்தான். நான் அன்றைய பத்திரிகையை மிக ஆவலுடன் படித்துக் கொண்டிருந்தேன். திடீரென்று சரசரவென்ற சப்தம். நான் சற்று எரிச்சலுடன் கண்களைப் பத்திரிகையை விட்டு விடுவித்து, சப்தம்வந்த திசைக்குத் திரும்பினேன். என்ன ஆச்சரியம் இரு சிட்டுக்குருவிகள் தங்களது சிறிய அலகுகளால் முற்றத்தில்கிடந்த எனது பழைய சப்பாத்துப் பெட்டியைக் கொத்துவதும், அதனுள் போவதும் வருவதுமாக இருந்தன. தங்களுக்கென ஒருவீட்டை அமைக்க அவை முயலுகின்றன என்று புரிந்துகொண்டேன். இனந்தெரியாத இரக்கம் அந்தக் குருவிகள்மேல் எனக்கு ஏற்பட்டது. கையிலிருந்த பத்திரிகையை ஒருபுறம் வைத்துவிட்டு, அந்தப் பெட்டியை எடுத்துப் பலகோணங்களில் வெட்டி ஒரு அழகிய வீடாக மாற்றினேன். பின்பு அதைச் சுவரின் ஒருமூலையில் வைத்துவிட்டு பழையபடி இருக்கையில் அமர்ந்து நடப்பவற்றைப் பார்த்தபடி இருந்தேன். என்னுடைய செய்கைகளை நோக்கிக் கொண்டிருந்த அந்தக்குருவிகள் இரண்டும் நான் வைத்திருந்த வீட்டைநோக்கிப் பறந்துசென்று, உள்ளே நுழைந்து ஆராய்ந்தார்கள். வீடுதேடும் படலம் இவ்வளவு லேசாக அமைந்து விட்டதே என்று மகிழ்வுடன் தங்கள் பாஷையில் ஏதோ கதைத்தார்கள். பின்பு என்னை நன்றிததும்பும் கண்களுடன் பார்த்தார்கள். அநேக அலுவல் தம் வீட்டிற்குச் செய்யவேண்டும் என்ற எண்ணம் உந்த கீச்... கீச்... என்று உல்லாச குரலெழுப்பி பறந்துசென்றார்கள்.

நாட்கள் நகர்ந்தன. நான் வைத்த வீட்டிலே வைக்கோல் பறவைகளின் இறகுகள்போன்றவைகளைத் தம்சின்னஞ்சிறிய அலகுகளால் அந்தத் தம்பதிகள் சேர்த்தன. அவற்றின் ஒற்றுமையையும், இடையிடையே ஏற்படும் சிறுசிறுசச்சரவுகளையும் பார்ப்பதில் சிலவேளைகளில் எனக்கு நேரம்போவதே தெரியாமல் என்னை மறந்திருப்பேன்.

ஒருநாள் பாடசாலைவிட்டு வந்தபோது கீச்...கீச்... என்ற மெல்லிய சப்தத்தைக் கேட்டு ஆச்சரியப்பட்டேன். எனக்கு அந்தக் கூட்டினுள் என்ன உள்ளது; ஒருவேளை குஞ்சுகள்தான் உள்ளதோஎன்று அறிய ஆவலுடன் மேசைமேல் ஏறி நோக்கினேன். ஒன்றையும்நான் காணவில்லை. எனவே கைகளைக் கூட்டினுள் நுழைத்துப் பார்த்தேன். அப்போது இரண்டு சிறிய பட்டுடல்கள் என் கரங்களில் தட்டியது. என்னையறியா மகிழ்வுடன் என் அம்மாவிடம் சொன்னேன். அம்மா எதற்காகக் குருவிக்கூட்டினுள் கைகளை விட்டாய்என்று என்னைக் கடிந்துகொண்டார். நான் அதைப்பொருட்படுத்தவில்லை. காரணம் நான் வைத்த வீட்டிலே இரண்டு சிறியஉருவங்கள் உதித்துவிட்டதுஎன்ற மகிழ்வு.

நாட்கள் வாரங்களாக மலர்ந்தது. குஞ்சுகளின் கீச்சென்ற ஒலியும் பெரிதாகியது. தாயும் தந்தையும் அவைகளுக்கு மாறிமாறிஉணவுகொடுத்து நாளொருமேனியும் பொழுதொருவண்ணமுமாக வளர்த்தார்கள். சிறிதுசிறிதாக அவைகள் இரண்டும் வெளியே தலைநீட்ட ஆரம்பித்தன. அப்போது தாயும் தந்தையும் அவற்றிற்கு உணவு ஊட்டும் அழகை நான் ரசிக்க முடிந்தது. அன்று ஒருநாள் காலைநேரம் படபடவென்ற சப்தம்கேட்டு வெளியே வந்தேன். பூரண வளர்ச்சியை இரண்டொரு நாட்களில் அடைய இருக்கும் அந்தச் சிறியகுருவிகள் தம் வீட்டினுள்ளேயே பறக்கப் பழகிக்கொண்டிருந்தன. எனக்கு அதன் பட்டுப் போன்ற இறக்கைகளை நீவ வேண்டும் என்ற ஆசையுந்த மேசையில்ஏறினேன். ஏறியதுதான் தாமதம் தந்தைக்குருவி பரிதாபமாக என்னைநோக்கிக் கதறியது. என்னே பாசத்தின் மகிமை. எனதுபிள்ளையை இந்தப் பாவிப்பெண் பறிக்கப்போகிறாளென்று ஏக்கத்துடன் கதறியதுபோல் தோன்றவே நான் மெதுவாகக் கீழேஇறங்கி சற்று யோசித்துக்கொண்டிருந்தபோது, உணவுகொண்டுவந்த தாய்க்குருவியும் தன் கணவனின் படபடப்பையும், துடிதுடிப்பையும் கண்டு தனது குஞ்சுகளுக்கு என்னவோ ஏதோஎன்று எண்ணி வாயிலிருந்த உணவையும் விட்டுவிட்டுக் கத்தியது. எனக்கு இது ஏதடா தொல்லையாகப் போய்விட்டதேஎன்று தோன்றியது. தாய்தந்தையின் குரலைக்கேட்ட அந்தக் குஞ்சுகளும் கீச்கீச்சென்று கத்தின. நான் அவ்விடம்விட்டு அகன்றேன்.

இரண்டுநாள் சென்றது. குருவிக்கூண்டிலே எந்தவிதமான ஆரவாரமும் கேட்கவில்லை. அந்தக் கூண்டினுள் நோக்கிய எனக்குத் திக்கென்றிருந்தது. காரணம், இரண்டு குஞ்சுகளையும் காணவில்லை. தாய்க்குருவியும் தந்தைக் குருவியும் என்னைச் சோகத்துடன் நோக்கிக் கொண்டிருந்தன. தாயும் தந்தையும் கஷ்டப்பட்டு வளர்த்த பிள்ளைகள் சொல்லாமல் கொள்ளாமல் பறந்துசென்றதை நினைக்க எனக்கு அந்தக் குஞ்சுகள்மேல் கோபம் உண்டாகியது. பெற்றமனம் பித்து பிள்ளைமனம் கல்லுதானே. நான் வைத்த வீட்டிலே சந்தோஷமாக வாழ்ந்த இரு சிட்டுக்குருவிகள் இன்று தம்மைவிட்டுப் பிரிந்துபோன பிள்ளைகளை நினைந்து சோககீதம் இசைத்துக் கொண்டிருக்கின்றன.

இதே செயல்கள் எத்தனையோ நாம் உலக வாழ்க்கையிலே காண்கின்றோம். எத்தனையோ பிள்ளைகளின் செயல்களால் பெற்றமனங்கள் உடைந்து சுக்குநூறுகின்றன. இதை அவர்கள் உணர்வார்களோ என்னவோ?

---

**யாரை ஆள்கிறோமோ அவர்களிடம்தான் அதிகமாகப் பெருந்தன்மையும், அக்கறையும் காண்பிக்க வேண்டுமென்பது இந்த நூற்றுண்டின் இரகசியம்.**

உருவகக் கதை

# உருவமாற்றம்

(இ. பேர்ணுட்)

வீட்டினுள் அவசிய எழுத்துவேலை ஒன்றில ஈடுபட்டிருந்தேன். இரு புதிய குரல்கள் தொனித்தன. என்ன! நான் வாசலில்தானே உட்கார்ந்திருக்கிறேன். என்னை அறியாமல் யார் உள்ளே நுழைந்திருப்பர்? சுற்றும் முற்றும் பார்த்தேன். ஒருவரையும் காணவில்லை. மீண்டும் என் வேலையைத் தொடர்ந்தேன். மீண்டும் அதே குரல்கள். எழுதுவதுபோல் பாசாங்கு செய்பவன்போலிருந்து உற்றுக் கேட்டேன். அங்கு பேசியது வேறு யாருமல்ல; எதிர்ப்புறத்தேயிருந்த உடைகள் மாட்டும் கயிற்றிலிருந்த ஓர் உடையினதும் ஒரு சேலை (சாறி) யினதும் பேச்சுத்தான். அம்மாவின் கைத்தறிச் சாறிக்கும் தங்கையின் மினிஸ் கேட்டிற்குமிடையே ஏதோ போட்டி — கேட்டுப் பாருங்கள்......

என்ன மேலைநாட்டிலிருந்து வந்துவிட்டு உன் அழகு பற்றி என்னிடமா சவால்விடுகிறாய்? உன்னைப்பற்றி நான் நன்கறிவேன். சவால் விட்டது சாறி.

இன்று யார் உன்னை அதிகம் விரும்புகின்றனர்? ஒரு சில கிழடுகள் மட்டும் தமது பழைய பிடியைத் தளர்த்தாததினால் நீ இன்னும் உயிருடன் இருக்கிறாய். உன் நிலையைப் புரிந்து பேசு. அதிர்வெடி ஒன்றைக் கொழுத்தியது மினி.

என் கண் குருடா அல்லது உன் கண் குருடா? நவநாகரிக நங்கையர் என்று கூறிக்கொண்டு ஒருசில நாட்களுக்கு உன்னை அணிந்துவிட்டுப் பின்னர் தம் ஆயுட்காலம் முழுவதும் என்னிடமே தஞ்சம புகுந்து விடுகின்றனர். இது தெரியுமா உனக்கு? சீறிப் பாய்ந்தது சாறி.

அழகுபற்றி என்னிடம் சவால விடாதே. இன்னும் நாடு பொருளாதாரநிலையில் இத்துணை பின்னடைந்திருக்கும்போது மக்கள் சிக்கன வாழ்க்கையைக் கடைப்பிடித்துச் சீரான வாழ்க்கையை வாழ வழிவகுப்பவன் நான். ஆணவத்துடன் பேசியது மினி.

சிக்கன வாழ்க்கை என்ற போலிப்பேச்சை என்னிடம் பேசாதே. பண்பு—பண்பாடு—மானம்—மரியாதை இவையனைத்தையும் காற்றிலே பறக்கவிட்டு வாழும் வாழ்வும் ஒரு வாழ்வா? நாட்டிலும் ஏட்டிலும் உன்னைப்பற்றி எழும் பேச்சுக்களும் செய்திகளும் நான் அறியாமலா இருக்கிறேன்? அவற்றையெல்லாம் இப்போது அம்பலப்படுத்தினுல் நீ என்னிடம் அடைக்கலம் புகுந்துவிடுவாய்.

நாஞவது உன்னிடம் அடைக்கலம் புகுவதாவது வீண் பேச்சுப்பேசி என் கோபத்திற்கு ஆளாகாதே.

ஓகோ! மேலைநாட்டுப் பெண்ணுகிய நீ நம் நாட்டுப் பண்பைக் கெடுத்துப் பாவையரைப் பலர் நகைக்கவைக்கும் நீ வாய் திறந்து பேசத் தணிந்து விட்டாயா? இதோ கேள்:

தடக்கு உடைகள் வேண்டாம் இங்கே
தடக்கி விழுந்தால் பலரும் நகைப்பர்
அடக்கமாக உடுப்பது தானே நல்
அரிவையர்க் கழகாம் நன்றே அறிவாய்.

என்ன! கவிதையினுல் கலங்கவைக்கலாம் என்று எண்ணுகிறாயாக்கும். உன் பேச்சு என்னிடம் பலிக்காது என்று ஒரு சாட்டையடி கொடுத்தது மினி.

என்ன மிஞ்சி விட்டாயா? ஆத்திரமும் அதிகாரமும் கலந்து தொனித்தன. இன்றுடன் உனக்கு ஒரு முடிவு. உன்னை உருமாற்றம் செய்கிறேனு இல்லையா பார். எதற்கும் ஓர் அளவுள்ளது சாறி.

சாறியின் பேச்சைக்கேட்க என் மனம் பொறுக்கமுடியவில்லை. ஆ், இப்போது அந்த மினிஉடை என் சிறியதங்கையின் சட்டையாக உருமாற்றம் பெற்றுவிட்டது.

# அம்மா அருளும்

(முருகா என்றதும் எ. மெட்டு.)

அம்மா என்றதும் உருகாதா உளம்
அபலையின் குறைகளைக் கேளாதா
உருகாதா உளம், உருகாதா தாயே! உருகாதா
வரம் வேண்டாயோ வழிதிறவாயோ
வானவர் காசினி நடுராணி—உருகாதா......

✻

பாவமே அறுத்து பரஸ்பரம் பூண
பரமனை ஈந்த பரோ பகாரி
அறவே அவரிடம் அன்பர்கள் சேரவே
ஆகிடும் முறையதே நீ உரைப்பாய்—உருகாதா

✻

மார்பிலே மகனை அணைத்து மகிழ்ந்தாய்
மறையை விஞவ உணர்ச்சியே கொண்டாய்
அநியாய வாதையின் அதிர்ச்சியில் மீண்டே
அணைத்திலும் அவரோடே பங் குற்ருய்—உரு.

✻

கர்ஞ நிதியின் கரையில்லாப் பாசத்தில்
கழுமர மடியங்கு எமையே பெற்ருய்
ஒளியினைப் பிறப்பிக்கும் தவத்திருக் காலத்தே
உணர்ச்சியின் உள்ளத்தை ஊக் குவிப்பாய்—உரு.

✻

மலருதே சுகபோகம் மாமிச இச்சையால்,
ஆளுது பாவங்கள் வழிஐம் பொறியால்
மாண்டிட்ட ஆன்மாவும் மனங்கசிந் துருகியே
தீங்கரும்(பு)ஐயனை தேடவே செய் திடாய்—உரு.

✻

தெய்வ ஜோதிநிலை நிலவவே வாழ்வினில்
தினமே தியாகபணி தேடி நிற்போம்
ஜெயசீலா என் நிறைவாக
ஜெயமும் அருளின் ஜெயசக்தி தாயே.—உரு.

சு. மேரி. பிரான்சிஸ்கா

✝

### திரு. அமிர்தநாதர் சூசைப்பிள்ளை அவர்களின் 1-ம் ஆண்டு மரண ஞாபகம்

மறைவு : 27—4—69

இவரின் ஆன்ம இளைப்பாற்றிக்காக நிகழும் சித்திரை 27-ம் திகதி திங்கட்கிழமை காலை மிருசுவில் அர்ச். நீக்கிலஸ் ஆலயத்தில் துக்கப் பாடற்பூசை ஒப்புக்கொடுக்கப் படுமென்பதை உறவினர், சிநேகிதருக்குத் தயவாக அறிவித்துக் கொள்கின்ருேம்.

இதனைக் கண்ணுறும் அனைவரும் இவரின் ஆன்ம இளைப்பாற்றிக்காக வேண்டுமாறு பணிவுடன் கேட்கிறோம்.

பிரிவால் துயருறும்
பிரிய மனைவி, பிள்ளைகள்,
மருமகன், பேரப்பிள்ளைகள்.
மிருசுவில்.

### நன்றியறிந்த ஸ்தோத்திரம்

பிறேக்நகர் பாலக யேசுவின் இரக்கத்தினுலும், மடு மாதா, குழந்தை யேசுவின் திரேசம்மாள், சுவாமி அக்னெல், இவர்களின் மன்ருட்டினுலும், வேலையில்லாமல் இருந்தவர், வேலை கிடைக்கப்பெற்ருர். ஒற்றுமையிழந்த குடும்பம், ஒற்றுமையாயிற்று. இதற்காக நன்றியறிந்த தோத்திரம் சொல்லி இதைப் பிரபலியப் படுத்துகிறேன்.

பாலகயேசுவின் அடியாள்
சூராவத்தை.

● ஸ்பானியதேசஅரசாங்க தலைவரான ஜெனறல் பிறுங்கோவின் அரசாங்கசபையில் ஒருவராக புதிய அரசியல் திருத்தத்தின்படி ஸ்பானிய ரொலெடோநகர் அதிமேற்றிராணியாரும், அத்தேச திருச்சபைமேலதிகாரியுமான கருதினுல் என்றிக் ஆண்டகை நியமனம் பெற்றிருக்கின்ருர். இவர் அங்கே திருச்சபை சம்பந்தமான கருமங்களை மாத்திரமல்ல, மற்றும் அநேக பிரச்சினைகளையும் கவனித்து வருவார்.

Digitized by Noolaham Foundation
noolaham.org | aavanaham.org

# மேதினச் சிந்தனை

— யோ: சைமன், வவுனியா —

'மே தினம்' தொழிலாளர் தினம் — நேர்மையோடும், கடமை உணர்ச்சியோடும் சேவை செய்துகொண்டு வரும் தொழிலாளி தன் உரிமை குன்றியதினால் குரல் எழுப்பிய உயர்ந்த தினம் தொழிலாளர் தினம். கடின உழைப்பின் தினம். நாடும் தேசமும் முன்னேற்றப் பாதையில் செல்வதற்குத் தொழிலாளியின் திறம்பட்ட சேவையே மூலகாரணமாவது. தொழிலாளியின் கரங்கள் இயங்கினால்தான் உலகம் இயங்கும். தொழிலாளியின் இரத்த வியர்வைதான் நாட்டையும் தேசத்தையும் முன்னுக்குக் கொண்டுவருவது. எந்தச் சமுதாயத்திலும், ஸ்தாபனங்களிலும், குழுக்களிலென்கிலும் சேவைசெய்யும் தொழிலாளிகள் தங்களுக்குள் அன்னியோன்னிய ஒற்றுமை நிலவும்படி நடந்துகொள்ளவேண்டும். இவ்வித ஒத்துழைத்தல்தான் உலகில் மாபெரும் சக்தியாகிவிடுகின்றது. இந்த ஒற்றுமைச் சக்தியில்தான் தொழிற் சங்கங்களும், தொழிற்சங்க சம்மேளனங்களும் அமைக்கப்பட்டன. அவைகள் இயங்கியும் வருகின்றன. தன் காலமெல்லாம் உழைத்து உழைத்து உருக்குலைந்த தொழிலாளியின் துயர் துடைப்பது தொழிலாளிகளின் ஒற்றுமையே. ஒருசில தந்திரவாதிகள் தொழிலாளர்களின் ஒற்றுமைச் சக்தியை — ஒன்றிப்பின் பலத்தைத் தங்கட்குச் சாதகமாக்கிக் கொண்டு தொழிலாளரைக் குபேரர்கள் ஆக்கிவைப்போம், மாடமாளிகைகள் போட்டுத் தருவோம், தேர் இரதங்கள் பூட்டித்தருவோம் என்றெல்லாம் ஆசைவார்த்தைகூறித் தொழிலாளர்களின் உணர்ச்சி நரம்புகளை முறுக்கேற்றிவிட்டுத் தாங்கள் பட்டம் பதவிகளை நாடிச் சென்றுவிடுகின்றனர். தொழிலாளி ஏமாற்றம் அடைகின்றான். பின்னர் வா! புறக்கதவால் வா! என்றெல்லாம் அலைக்கழிக்கப்படுகின்றான்.

பொறுப்புணர்ச்சியும் கடமையும் மிகுந்த தொழிலாளியிடத்தில் நான்கு பிரதான இலட்சணங்கள் அமைய வேண்டும்:

1. தான் ஒப்புக்கொண்ட வேலையைக் குறித்த நேரத்தில், குறித்தமாதிரிச் செய்து முடிக்க வேண்டும்.
2. தன் உடன் தொழிலாளருடன் அன்னியோன்னியமாக நடக்கவேண்டும்.
3. பொது மக்களுக்குள் அன்பாய்ச் சீவிக்க வேண்டும்.
4. தன் உரிமைகளை நீதியான முறைப்படி பெற்றுக்கொள்ள வேண்டும்.

பத்தொன்பதாம் நூற்றாண்டின் பின்னர்தான் மக்கள் தொழிலையும் தொழிலாளியையும் மதிக்கத் துவங்கினர். தொழிலாளரும் முதலாளிகளும் தங்களுக்குள் ஒற்றுமையுடன் கூடிக் கலந்து தங்கள் நன்மைகளுக்குத் தீங்கு ஏற்படாவண்ணம் நல்ல முடிவுக்கு வருவதே சிறந்த வழி. ஓர் உடல் நன்கு இயங்க வேண்டுமானால் அதன் உறுப்புகள் யாவும் ஒன்றுபட்டு இயங்கவேண்டியது அவசியம். தொழிலும் முதலும் ஒன்றி வாழவேண்டும். ஒருவர் உதவி மற்றவருக்கு மிகவும் அவசியம். தொழிலாளியின்றி முதலாளி இயங்க முடியாது. முதலாளியின்றித் தொழிலாளி இயங்க முடியாது.

காலத்துக்குக்காலம் உலகம் எங்கும் உள்ள தொழிலாளர்கள் தங்களது ஆன்ம நிலையின் அசமந்தத்திலே சமுதாய வாழ்வின் சீர்கேட்டிலே அமிழ்ந்தி உழன்றதினால் எமது திருச்சபையின் தனிப்பெரும் தலைவர்களாகத் திகழ்ந்த பாப்புமார் அடிக்கடி மனித சமுதாயத்தின் ஒழுக்க முறைகளையும் தொழிலாளரின் நலன்களையும் குறித்துச் சுற்றுநிருபங்களும் அறிக்கைகளும் எழுதி வெளியிட்டனர். அதனால், நாடுகள் விழிப்படைந்தன. தொழிலாளரின் சேவை, கடமை, உரிமை இவற்றைப்பற்றிய சட்டதிட்டங்களை வகுத்தனர். மறைந்த மாபெரும் பாப்பு 12-ம் பத்திநாதர் தொழிலாளரின் அவல நிலைகண்டு வருந்தினர். நிருபங்கள் எழுதியதோடு மட்டும் நின்றுவிடாது, தொழிலாளர் தினமான வைகாசி மாதம் முதலாம் திகதியன்றே புனித சூசையப்பரின் திருநாளைக் கொண்டாட வேண்டுமென்றும் பிரகடனப்படுத்தி, தொழிலாளர் யாவரும் அவரின் அரவணைப்பில் நன்கு சேவைசெய்ய வேண்டும், நல்வாழ்வு வாழ்ந்து ஆன்மநலன் தேடவேண்டும் என்றும் அவாவுற்றார். கிறிஸ்தவ தொழிலாளர் புனித சூசையப்பரின் முன்மாதிரிகைகளைப் பின்பற்றி நேர்மையுடனும் கடமை உணர்ச்சியுடனும் சேவை செய்து மற்றோர்க்கும் மேல்வரிச் சட்டமாகத் திகழவேண்டும்.

முதலாளியின் சொத்துக்கு நட்டம் செய்யாது, கடமை தவறாது, லஞ்சம் விரும்பாது தீதற்ற குணங்களைத் தொடரவிடாது தொழிலாளி வாழ்ந்துவருவதே சிறந்த முறை.

## பேதுருவானவர்...

[1-ம் பக்கத் தொடர்ச்சி]

கின்றார். படம்முழுவதும் உண்மைச் சம்பவங்களையே எடுத்துக்காட்டுகின்றது. இதிலே ஐந்துநிமிஷம்வரை 1969-ம்ஆண்டு பாப்பரசர் கிறிஸ்மஸ் பூசைப்பலி நிறைவேற்றிய காட்சியும் அடங்கியுள்ளது. சமீபத்திலே இந்தப் படம் லண்டன் நகரில் அந்தரங்கமாகக் காண்பிக்கப்பட்டபோது சமுகமாயிருந்தவர்கள் அனைவர்க்கும் பெரும் அருட்சியை உண்டுபண்ணலாயிற்று.

# கல்லே நீ சொல்!

— ச. வில்பிறெட் —

மாலை மணிஆறு, பகலவன் கிழக்கிலே தோன்றி ஆறிரு மணிநேரங்களைப் பகலாய்க் கழித்து, மேற்கே உயர்ந்த காடுகளுக்கப்பால் அவன் மறைந்துவிட்ட போதிலும் அவனுடைய தீங்குழம்புகளை ஒத்த செங்கதிர்கள் இன்னும் வானிலே செக்கச் செவேரென வர்ணம் தீட்டிக்கொண்டிருந்தன.

அச்சமயம் வவுனியா வீதியிலே...... நடந்தேன். நடந்துகொண்டே இருந்தேன். அமைதியாக உறங்கும் கானகத்தினூடே பறந்து வந்தது, மன்னார்—யாழ்நகர் கடுகதி; 83 என்ற எண்ணைத் தன் நெற்றியில் தாங்கியவண்ணம் சர்—ரார்—என்று மின்னல் வேகத்தில் என்னைக் கடந்து சென்றது. பஸ் சென்ற வேகத்தில் றோட்டில் கிடந்த கல் ஒன்று என்னை நோக்கி ஓடிவந்து என் காலில் பட்டு நின்றது. "ஐயோ" என்று குனிந்தேன். கல்லைக் கையில் எடுத்தேன். கோபம் கண்ணை மறைத்தது. ஆத்திரம் அறிவை மறித்தது. நிலத்தில் எறிந்து தூள் பொடியாக உடைத்தெறிய என் பேதை மனம் துடித்தது. அப்போது அக்கல்பேசுவது போன்ற பிரமை.

"ஐயா ஏன் என்னைத் துன்புறுத்தப் பார்க்கிறீகள். நான் உயிரற்ற வாய்பேசாத கல் அல்லவா? என்னை மன்னித்துவிடுங்கள். கல்தோன்றி மண் தோன்றாக் காலத்தே...... என்று பாடுகிறார்கள் உங்கள் தமிழ்ப் புலவர்கள். அப்புடி மிகப் பழமை வாய்ந்தவர்கள் நாங்கள். பேதுரு தால கால மலை சிவனொளிபாத மலை இவைகளில் என் முன்னோர் வாழ்கின்றனர். அதே வம்சம் தான் நான் என்று கூறுவது போன்றிருந்தது அக்கல்லின் கதை.

கல்லை என் உள்ளங்கையில் வைத்தேன். இப்போது எறிந்து உடைக்க மனம் வரவில்லை. கல்லானாலும் மிகப் பழமை வாய்ந்தது அல்லவா? நான் நிற்கும் பூமியும் அதன் இனம் அல்லவா? இன்னும் கூறுவதாக உணர்ந்தேன்.

"ஐயா ஆண்டவர் யேசு கல்லைக் காட்டி, இராயப்பர் என்ற அவர் சீடரிடம் "இராயப்பா நீ கல்லாய் இருக்கிறாய்; இந்தக் கல்லின்மேல் எனது திருச்சபையைக் கட்டுவேன்" என்று கூறினார் அல்லவா? அதே கல்தான் நான். அசையாத பாறைக் கல்மீது கட்டினார் அல்லவா அருள்தரும் திருச்சபையை. அதே கல்லினம்தான் நானும். அதை நிறுவிய ஆண்டவர் கடைசி நாளில் இறந்து அடக்கம் பண்ணப்பட்டதும் என்னால் ஆன கல்லறை ஒன்றில் அல்லவா? மூன்றாம்நாள் அவர் வெற்றிவீரனாக உயிர்க்க நான் அல்லவா வழிவிட்டேன். தேவதூதன் கல்லைப் புரட்டினார். நானும் ஆண்டவனை வணங்கி, வழிவிலகி நின்றேன் அல்லவா? அது போன்று அவர் அடியார்களான கிறிஸ்தவர்கள் என்னாலான கல்லறைக் கிடங்கில் அல்லவா அடக்கம் செய்யப்படுகிறார்கள்" என்று சொல்வதாக என் மனத்திரையில் பட்டது.

இப்போது அக்கல் மீது எனக்குக் கோபம் வரவில்லை. இரக்கம வந்தது; ஆத்திரம் வரவில்லை அனுதாபம் பிறந்தது. அமைதியான அந்தி (மாலை) நேரம். மேலும் உற்றுக் கவனித்தேன். மீண்டும் கூறுவதுபோல்......

"ஐயா நீங்கள் நிற்கும் இந்த வீதியில் நான் கிடக்கிறேன், என் நண்பர்களும் என்னோடு கிடக்கிறார்கள். வீதியில் போகும் கார், பஸ், வண்டி, மோட்டார், சைக்கிள் இன்னும் எத்தனை எத்தனை உருவங்கள் எங்களை மிதித்துச் செல்கின்றன. அவற்றை நாங்கள் சபிப்பதில்லை. தூஷணிப்பதில்லை. மாறாகக் கொலைக்களம் ஏகும் செம்மறி வாய் திறவாது நிற்பதுபோல், என்னைத் துன்புறுத்தும் பகைஞர் முன் மௌனம் காத்த யேசு அண்ணலைப்போல் நாங்களும் துன்பத்தைப் பொறுமையோடு ஏற்றுக்கொள்கிறோம், இறைவனுக்காக."

உணர்ச்சியின் உச்சத்துக்கு என்னை அழைத்துச்சென்றது இக்கல்லின் நினைவு. கல்லின் சோகக் கதை. "கல்லே நீ சொல், இன்னும் சொல்" என்று வாய்திறந்து சத்தமிட்டுக் கூறிவிட்டேன். "என்ன பிறதர் நடுறோட்டில்... இந்த இரவில்... என்ன செய்கிறீர்கள் என்ன தனிமையில் பேசுகிறீர்கள். வாருங்கள் போவோம் என்று அழைத்தார் என் நண்பர். அப்போதுதான் உணர்ச்சிபெற்று நிமிர்ந்தேன். விழுந்தவன் வெட்கத்துக் கஞ்சிச சிரித்ததுபோல நானும் ஒரு புன்முறுவலை அவர்மீது அள்ளி வீசினேன்.

# புதிய புனிதர் நால்வர்

எதிரேவரும் இரண்டு மாதங்களில் நாலுபேருக்கு கீழே குறிக்கப்படும் திகதிகளில் அர்ச்சியசிஷ்டபட்டம் அளிக்கப்படும்:

**வைகாசி 3:**

லியனாடோ முறியால்டோ சுவாமியார். இவர் ஓர் இத்தாலியர். 1828-ல் பிறந்து 1900-ல் மரித்தவர். ஏழைகளையும், இளைஞரையும் பாதுகாத்து வழிடநத்துவதற்கு தமது சீவியத்தை அர்ப்பணித்தவர்.

**வைகாசி 10:**

மேரி தெரெஸ் வீக்ரோயர் கூடீர்தாயார். பிரான்சு தேசத்தவர். அடைக்கல நாயகியின் கன்னியர் கூட்டத்தை ஸ்தாபித்தவர். 1805-ல் பிறந்து 1851-ல் மரித்தவர்.

**வைகாசி 31:**

அவில்லாவைச் சேர்ந்த யோவன். 16-ம் நூற்றாண்டிலே சீவித்த ஒரு ஸ்பானிய குருப்பிரசாதியான இவர் ஸ்பெயினிலும் போர்த்துக்காலிலும் ஏழைகளின் மத்தியில் ஊழியம்புரிந்து வந்தார்.

**ஆனி 21:**

நிக்கொலாரி றெலவிக்கும் இன்னும் சிலரும் வேதசாட்சிகள்.

இங்கிலாந்தின் 40 வேதசாட்சிகள் வருகிற ஐப்பசி மாதத்தில் அர்ச்சியசிஷ்ட பட்டம் பெறுவார்களென எதிர்பார்க்கப்படுகிறது.

# இதயகீதமாகிய நன்றிக்கீதம்

(2-ம் பக்கத் தொடர்ச்சி)

திருச்சிலுவைப்பாதையிலே ஒவ்வொரு ஸ்தலத்திலும், "திவ்விய யேசுவே, உம்மை ஆராதித்து வணங்கி உமக்கு நன்றியறிந்த ஸ்தோத்திரம பண்ணுகிறோம்; அதேனென்றால்..." என்றும்,

இவ்வாறாக நாம் சொல்லுகின்ற பல அருமையான செபங்களிலும், மற்றும் நாம் பாடுகின்ற அழகான கீதங்களிலும் இறைவனுக்கு நன்றித் துதி கூறுகிறோம்.

நிற்க, ஓர் உபகாரத்தைப் பெற்ற ஒருவர் அதைப் பெற்றும் பெறாதவர்போல் நன்றி செலுத்தாமல் நடந்துகொள்ளும் நன்றிகேடான செயலைப் போன்று மனதைப் புண்படுத்துவது வேறொன்றில்லை. நாம பெற்றுக்கொண்ட உபகாரங்களுக்காக எமது நன்றியறிதலைக் கடவுளுமே எதிர்பார்க்கின்றார். சுவிசேஷத்தில் ஓர் எடுத்துக்காட்டாக,

... அப்பொழுது குஷ்டரோகிகள் பதின்மர் அவருக்கு எதிராக வந்து, "யேசுவே, போதகரே, எங்கள் பேரில் இரக்கமாயிருமென்று உரத்த சப்தமாகக் கூப்பிட்டார்கள். அவர்களை அவர் கண்டவுடன், "நீங்கள்போய், உங்களை ஆசாரியருக்குக் காண்பியுங்கள்" என்றார். அவர்கள் போகும் போதே சொஸ்தமானார்கள். தான் சொஸ்தமடைந்ததைக் கண்டு, அவர்களில் ஒருவன் உரத்த சப்தமாய்ச் சர்வேசுரனைத் தோத்திரித்துக்கொண்டு திரும்பிவந்து, அவருடைய பாதங்களுக்கு முன்பாக முகங்குப்புற விழுந்து, அவருக்கு நன்றியறிந்த தோத்திரஞ் சொன்னான். அவனோ சமாரியனாயிருந்தான்.

யேசுநாதர் மறுமொழியாக, பதின்மரும் சொஸ்தமானார்கள் அன்றோ! மற்ற ஒன்பதுபேரும் எங்கே? இந்த அந்நியன் ஒழிய வேறொருவனும் திரும்பி வந்து சர்வேசுரனுக்கு ஸ்துதி செலுத்தக் காணோமே என்று சொல்லி அவனை நோக்கி, "நீ எழுந்து போ; உன் விசுவாசம் உன்னை இரட்சித்தது" என்று திருவுளம்பற்றினார். அந்த ஒன்பது பேரும் திரும்பிவந்து தாங்கள் பெற்றநன்மைக்காக அவருக்கு நன்றி செலுத்தாதது பெரும் நன்றிகேடன்றி வேறென்ன என்பது?

ஆகவே, நாம் இறைவனுக்கு நன்றிசெலுத்துவதற்கான சந்தர்ப்பங்களைத் தவறவிடாது கண்ணும் கருத்துமாக அவற்றைப் பயன்படுத்துவோம்! இதயகீதமாகிய நன்றிக்கீதத்தை இனிதே பாடுவோம்! தாவீது இராசாவின் நன்றிக்கீதத்தை மனதிற் கொண்டு, 'என் ஆத்துமாவே, கர்த்தரை ஸ்தோத்திரி; அவர் செய்த உபகாரங்களை மறவாதே ...' என்று நாமும் பாடுவோம் நன்றிக்கீதம்.

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

## திருவழிபாட்டின் நாள்காட்டி

### 1970 — சித்திரை மாதம்

| | | | |
|---|---|---|---|
| 26 | ஞாயிறு | பாஸ்கா 5-ம் ஞாயிறு | [வெ] |
| 27 | திங்கள் | தினப்பூசை | [வெ] |
| 28 | செவ்வாய் | ,, | [வெ] |
| 29 | புதன் | ,, | [வெ] |
| 30 | வியாழன் | புனித கத்தறின் | [வெ] |

### வைகாசி — 1970

| | | | |
|---|---|---|---|
| 1 | வெள்ளி | தொழிலாளரின் பாதுகாவலர் | [வெ] |
| 2 | சனி | புனித அத்தனேசியார் | [வெ] |

*சத்தியவேத பாதுகாவலன்*

# பெண்மையும் நாகரிகமும்

திருச்சபையில் பெண்மை மிகஉன்னதமான ஒரு இடத்தை வகிக்கின்றது. புனிதர்களுள் சிறந்தவளான தேவதாய் பெண்மைக்குப் பெருமை தேடிக்கொடுத்தாள். அன்று முதல் இன்றுவரை பெண்கள் விசுவாசத்தையும் ஒழுக்கத்தையும பாதுகாப்பதில் பிரதானபங்கு கொண்டிருந்திருக்கின்றார்கள். ஆகவேதான் திருச்சபையின் விரோதிகள் "திருச்சபையை ஒழிக்க வேண்டுமானல் முதலில் பெண்மையை ஒழிக்க வேண்டும்" என்று ஒரு முறை பரிகாசமாகக் குறிப்பிட்டனர். இது ஒரு விதத்தில் உண்மை. பெண்மையை ஒழிக்க முடியாது. அதை சீர்குலைக்கத்தான் முடியும்.

இன்று பெண்மையை சீர்குலைக்க எத்தனையோ தீய சக்திகள் மும்முரமாக ஈடுபட்டுள்ளதை நாம் உணரலாம். எங்கு நோக்கினும் ஆபாசமான படங்கள், படக்காட்சிகள், இலக்கியங்கள் காணப்படுகின்றன. எல்லாவற்றுக்கும் மேலாக, புனிதமாக பாதுகாக்கப்படவேண்டிய உடலை காட்சிப்பொருளாக்கும் அலங்கோல உடைகள் பெண்ணின் பெருமையை சீர்குலைக்கின்றன. இத்தீங்குகள் பெருவாரியாக எங்கும் நிறைந்துள்ளதால் அவை மக்களுக்குப் பழகிப்போய் அவற்றின் கேடுகளை உணரும் சக்தியை இழந்துவிடுகின்றனர். எத்தனையோ கத்தோலிக்க பெண்கள் அடக்கமற்ற உடை அணிவதை மிக அற்ப விஷயமாகக் கருதுகின்றனர். ஆபாசமான உடை பிறருக்கு பாவச்சோதனையாயிருப்பதுடன் அணிவோரையும் சுயமதிப்பை இழக்கச் செய்கிறது. பெண்கள் தங்கள் ஆடைகளை மேலும் கீழும் குறைத்துக் கொண்டு வருவதன்மூலம் தீய சக்திகளின் கருவிகளாகத் தாம மாறுவதை உணர்ந்ததாகத் தெரியவில்லை.

ஆபாசமாக உடை அணிபவர்கள் எல்லோரும் பிறரை பாவத்தில் விழுத்த வேண்டும் என்னும தீய நோக்கத்துடன் அவ்வாறு செய்வதில்லை, "எல்லோரும் அப்படிச் செய்கிறார்கள்; அதுவே இக்கால நாகரீகம்" என்று எண்ணி வேறுபட்டுநிற்கத் துணிச்சலின்றியே பிறரைப் பின்பற்றுகின்றனர். எல்லோரும் செய்வதனல் பிழையான காரியம் சரியாகிவிடாது. இத்தகைய மனோபாவத்தை நீக்க யாது செய்யலாம்?

இளம் பெண்களுக்கும், சிறுமிகளுக்கும் புனிதமாக உடை அணிய வேண்டியதன் அவசியத்தை, தற்கால உடையலங்காரத்தில உள்ள தவறுகளை, அவை வாலிபர் மனத்தில் ஏற்படுத்தக்கூடிய களங்கத்தை வெளிப்படையாகவும் தர்க்கரீதியாகவும் எடுத்துக் காட்டுவது நலம். இப்பணி பெரும்பாலும் பெற்றோரிலும், பாடசாலையிலும் தங்கியிருக்கின்றது. ஒரு காரியத்தைத் தடுப்பதைவிட அதன் தீங்குகளை எடுத்துக் காட்டுவது கூடியநன்மை பயக்கும். சில சமயங்களில் நாகரீக மோகம் கொண்ட சில தாய்மார்களே தம் மக்களை தவறான வழியில் இட்டுச்செல்கின்றனர். இளைஞர்களை மட்டும் எப்படிக் குறை சொல்ல முடியும்?

ஆகவே, திருச்சபையில் பெண்மையின் புனிதம் காக்கப்படவேண்டுமாயின் தீய சக்திகளிலிருந்து தம்மைப் பாதுகாத்துக் கொள்ளக்கூடிய அறிவை திடமான மனோபாவத்தை எமது இளம் நங்கையர் மத்தியில் உருவாக்குதல் வேண்டும்.

● வத்திக்கானும், கனடாவும் இப்போது தங்களிடையே இருந்துவரும் சிநேக உறவுகளை மேலும் பலப்படுத்த விரும்பி இராசீய உறவுகளை ஏற்படுத்த இணங்கியுள்ளன. அதனல் வத்திக்கான் கனடிய அரசாங்கத்தினிடமாகத் தனது ஸ்தானிகரையும், வத்திக்கானிடமாகக் கனடா தனது ஸ்தானிகரையும் நியமித்திருக்கின்றன. வத்திக்கான் ஸ்தானிகராக இமனுவேல் கிளாறிசோ அதிமேற்றிராணியாரைப் பாப்பரசர் நியமனஞ் செய்திருக்கின்றார்.

# யேசுநாதர் சிநேகித்திருந்த அந்தச் சீஷன் இராயப்பரைப் பார்த்து அவர் 'சுவாமிதான்' என்றார்

(பரி. அரு. 21-ம் அதி. 7-ம் வச.)

நம் அன்பின் தெய்வம் யேசுநாதர், உயிர்த்தெழுந்து நாற்பது நாட்களாக, தம் அப்போஸ்தலரை அடிக்கடி தரிசித்து, அவர்களுடன் அன்புரையாடி, தமது திருக்காயங்களைக் காண்பித்து, அவர்களுடன் அப்பம்பிட்டு விருந்துண்டு, தாம் மெய்யாகவே உயிர்த்தெழுந்தார் என்று உறுதிப்படுத்தினர். அன்றியும் மோயீசன்முதல் சகல தீர்க்கதரிசியாலும் தம்மைப்பற்றிச் சொல்லப்பட்ட சகல வேத வாக்கியங்களையும் நினைப்பூட்டி, அவை நிறைவேறி இருப்பதையும், விளக்கினர். தாம் முன் போதித்தபடி உலகெங்கும்போய் பிதா, சுதன், பரிசுத்த ஆவியின் நாமத்தினலே, ஞானஸ்நானம் கொடுத்து, பாவங்களை மன்னித்து, தாம்தொடக்கிவிட்ட இரட்சணிய பணியை தொடர்ந்து நடத்தும்படியும், கற்பித்தார். அத்துடன் தம்முடைய உதவியின்றி அவர்களால் ஒன்றும் செய்ய முடியாதென்று திபேரியாக் கடற்கரையில் நடந்த மூன்றாவது தரிசனையின்போது உறுதியாக அறியச்செய்தார்.

எவ்வாறெனில், யேசுநாதர் மூன்றும் முறையாக திபேரியாக் கடற்கரையில் தரிசனையானபோது, அத்தரிசனை பெற்றோர் பரி. இராயப்பரும் பரி. தோமையாரும், நத்தனயேலும், செபதேயுவின் குமாரரும், அவருடைய சீஷரில் இரண்டுபேரும் என்று பரி. அருளப்பரே எழுதிவைத்து இருக்கிறார். இவர்கள் யாவரும் இரவிரவாக தங்கள் வலைகளை வீசி, மீன்பிடிக்கப் பிரயாசப்பட்டும் ஒன்றும் அகப்படாததினல், மனம்களைத்து இருந்தபோது, யேசுநாதர் அவர்களுக்குத் தரிசனையாகி அவர்களைநோக்கி, (பரி. அரு. 21-ம் அதி. 5-ம் வச.) "பிள்ளைகளே! உங்களிடத்தில் ஏதாகிலும் கறிபதார்த்தம் உண்டோ" என்று கேட்டார். என்னே நம் அன்பின் தெய்வத்தின் பிதாவுக்குரிய பரிவு! தமது கடைசி இராப்போசன வேளையில், சினேகிதர் என்று அழைத்த யேசுநாதர், இங்கு அவர்களின் தனிமையை, பெலவீனத்தை அறிந்து, பிதாவுக்குரிய அன்புடன் பிள்ளைகளே என்று அழைக்கிறார். "உங்களிடம் ஏதாவது கறிபதார்த்தம் உண்டா"? என்று வினவி அவர்கள் வெறுமையை,, ஒன்றுமில்லாமையை உணரவைக்கிறார். அவர்களும் தங்கள் வல்லமைக்குறைவை உணர்ந்தவர்களாய், ஒன்றும் அகப்படவில்லை'என்று கூறி தங்கள் பெலவீனத்தை ஒப்புக்கொள்கிறார்கள். உடனேதானே (பரி. அரு. 21-ம் அதி. 6–ம் வச.) யேசுநாதர் "படகின் வலது பக்கத்தில் வலையைவீசுங்கள்; உங்களுக்கு அகப்படும்" என்றார். அப்படியே அவர்கள் வலையை வீசி, அகப்பட்ட மீனின் மிகுதியினல் அதை இழுக்க மாட்டாதிருந்தார்கள். அப்போதுதான், (பரி. அரு. 21-ம் அதி. 7-ம வச.) "யேசுநாதர் சிநேகித்திருந்த அந்தச் சீஷன் பரி. இராயப்பரைப் பார்த்து, 'அவர் சுவாமிதான்' என்றார்." மற்றச் சீஷர்கள் 153 பெரிய மச்சங்கள் உள்ள வலையை இழுத்துக்கொண்டு கரைக்கு வந்தனர். அத்தனை மச்சங்கள் இருந்த போதிலும் வலை கிழியவில்லை. யேசுநாதர் உயிர்த்தெழுந்தபின் செய்த இப்புதுமை அப்போஸ்தலருக்கு மாத்திரமல்ல, சகல விசுவாசிகளுக்கும் இரு பெரும் படிப்பினைகளைக் கற்பிக்கிறது. முதலாவது, இறைவனின் உதவியின்றி, அருளின்றி மனிதவல்லமையால் ஒன்றும் செய்ய முடியாதென்பது. இரண்டாவது பரிசுத்த சுவிசேஷக அருளப்பரைப்போல் மட்டற்ற விதமாய் இறைவனை நேசிப்போருக்கு. 3-வது தரிசனையில் மற்றும் அப்போஸ்தலர் யேசுநாதர்தான் என்று கண்டறியுமுன்பே, 'அவர் சுவாமிதான்' என்ற கண்டறிந்த பான்மையாக ஞானக்கண்கள் திறக்கப்படும் என்பது. இவ்வுண்மைகளை அவர் தமது போதனைக்காலமாகிய மூன்று வருஷங்களிலும் அடிக்கடி அறியவைத்தார். ஆகையால் அவரது போதனையைப் பின்பற்றுவோருக்கு அவர் பிதாவுக்குரிய அன்பு காட்டுவார். பிள்ளைபோல் அரவணைப்பார். நண்பனைப்போல் சினேகிப்பார். அப்போது அவர்கள் ஞானக்கண்கள் திறக்கப்பட்டு அப்போஸ்தலரைப்போல், புனிதரைப்போல், இறைவாக்கினர்போல், வேதசாட்சிகள் போல் அவரது முகதரிசனையையும் பெறுவார்கள்.

— நாதன்.

● ஜப்பானிலே கத்தோலிக்கருக்கும், புறொட்டஸ்தாந்தருக்கும் பொதுவான சுவிசேஷம் ஒன்றின மொழிபெயர்ப்பைச் செய்வதற்கான திட்டம் ஒன்று செய்யப்பட்டிருக்கிறது. அங்கே புறொட்டஸ்தாந்தர் 1954-ம் ஆண்டிலும், கத்தோலிக்கர் 1964-ம ஆண்டிலும்மொழிபெயர்க்கப்பட்ட சுவிசேஷங்களையேஇப்போது பிரயோகித்து வருகின்றார்கள்.

● பரிசுத்த தந்தை சின்னப்ப பாப்பரசரின் குருத்துவ செம்பொன் யூபிலி ஞாபகார்த்தமாகவும், முதலாவது வத்திக்கான் திருசசங்கத்தின் நூற்றாண்டுவிழா ஞாபகார்த்தமாகவும், ஐக்கியநாடுகள் ஸ்தாபனம் நிறுவப்பட்ட 25-ம்வருட நிறைவுவிழா ஞாபகார்த்தமாகவும் பல்வேறுஇனமான பல தபால் முத்திரைகளை வத்திக்கான் வெளியிடவிருக்கிறது.

# றொடீசியா மேற்றிராணிமாரின் கலக்கம்

தென் ஆபிரிக்க றொடீசியா தேசத்தில் நிலைமை வரவர மோசமாகிக்கொண்டு வருகிறது. அத்தேசம் நிறவெறியில் தீவிரபோக்கை அடைந்துவிட்டதன் பயனக, குருமார், சந்நியாசிகள், கன்னியாஸ்திரிகள் தன்னும் தத்தம் தோல்நிறத்தைப் பொருட்படுத்தாது ஒருகூட்டத்தினராக ஓர் இல்லத்திலே வசிக்கமுடியாத நிலைமை சட்டத்தினல் ஏற்படுத்தப்பட்டிருக்கின்றது. வெள்ளைத்தோல் உள்ள பிள்ளைகளைநிறத்தோலுள்ள பிள்ளைகளுடன் ஒரு பள்ளிக்கூடத்தில் படிப்பிக்க முடியாது. வேதபோதகம் செய்ய இருசாராரையும் ஒரு கூட்டத்தினராக நடத்தவும் முடியாது. இப்படியாயின் கிறிஸ்துநாதரின் கட்டளையை அனுசரிக்க முடியாத நிலைமை ஏற்பட்டிருப்பதை அத்தேச மேற்றிராணிமார் அண்மையில் வெளிப்படுத்திய நிருபத்தில் குறித்திருக்கின்றனர்.

# இத்தாலியிலும் குருமார்தொகை குறைகிறது

1870-ம் ஆண்டில் 280 லட்சம் கத்தோலிக்ருக்கு 85,000 குருமார் இருந்தார்கள். இன்று 100வருடங்களுக்குப்பின் இத்தாலியிலுள்ள கத்தோலிக்கரின் தொகை 540லட்சம். ஆனல், இன்று அங்குள்ள குருமாரின் தொகை 43,000மாத்திரமே. அதாவது கடந்த 100வருடங்களில் கத்தோலிக்கரின் தொகை இரட்டிக்க குருமாரின் தொகை அரைவாசியாகிவிட்டது.

இக்குறையை ஓரளவுக்கு நிவிர்த்திசெய்யும் முகமாக இத்தாலி ஆயர் சபை பொதுநிலையினரில் இருந்து தியாக்கோன்மாரைத்தெரிந்து அவர்களைக் கொண்டு தற்போது குருமாரால்செய்யப்படும் சில பணிகளை நிறைவேற்றுவிக்க ஆலோசித்து வருகிறது.

கருதினல்மார், அதிமேற்றிராணிமார், மேற்றிராணிமாராக 309அங்கத்தவரைக்கொண்ட இத்தாலிய ஆயர்சபை உலகத்தில் ஆகப்பெரிய ஆயர்சபை; மாற்றங்களை அதிகமாக விரும்புபவர்களல்ல. இத்தாலியிலுள்ள குருமாரில் காலவாசிப்பேர் 65வயதுகடந்தவர்கள், மாற்றங்களில் அக்கறை எடாதவர்கள். வயதில் குறைந்த குருமாரோ மாற்றங்களை விரும்புகிறார்கள்.

இப்பத்திரிகை யாழ்ப்பாணம், 20 இலக்க 5ஆம் குறுக்குத்தெருவில் வதியும் திரு. சீக்கிலஸ் ஜேம்ஸ் அவர்களால் உரிமையாளருக்காக அர்ச். சூசைமாமுனிவர் அச்சகத்தில் 1970ஆம் ஆ சித்திரைமீ 25ஆம் உ சனிக்கிழமை அச்சிடப்பெற்று வெளியிடப்பட்டது. தந்தி : "கதலிக் பிறஸ்" யாழ்ப்பாணம். தொலைபேசி : 300 தாபிதம் : 1876.

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org